# தென்மொழி


## செந்தமிழை வென்றெடுத்த
## சீரியலாளன் ஒளவை !



உரைவேந்தர் என்றுபுகழ்
ஒண்புலவர் ஒளவை
துரைசாமி தோன்றியபின்
அன்ரே — நரைவாரும்
தெள்ளுதமிழ் நூல்களெலாம்
தீந்தமிழாய்த் தித்தித்த
கொள்ளுமுயர் செம்பொருளைக்
கொண்டு !

ஆரியத்தால் வேய்ந்த
அழிவுரைகள் மாய்ந்தொழிய
வீரியத்தால் செந்தமிழை
வென்றெடுத்தார் — சீரியத்தால்
ஒளவை துசைாமி
ஆய்ந்துபல நூலுரைகள்
செவ்வியவாய் நேரியவாய்ச்
செய்து !




சுவடி : 17
ஓலை : 9

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
உருபா : 1-25

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 833 :** பேரன்பு கெழுமிய புலவரீர், தாங்கள் அன்புடன் அனுப்பிய தென்மொழி பெற்றுக் களிபேருவகை கொண்டேன். தென்மொழி வாயிலாகப் பாவாணர் பற்றிய அரிய செய்திகளை அறிந்தேன். மிக்க பயன் நல்கியது. — தாங்கள் வெளிநாடு செல்வது குறித்து மிக்க மகிழ்ச்சி. எனக்கொரு மனக் குறை. உரிமையோடு சொல்லுகின்றேன்.

சென்னை மாநகர் மக்கள் சார்பில், — தமிழகத்தின் தலைநகர் வாழ் மக்கள் சார்பில் — மதிப்பிற்குரிய பாவாணருக்கு இரங்கல் விழா நடத்திய செய்தி பற்றித் தங்கள் இதழினில், பிற இரங்கல் கூட்டங்களின் செய்தித் தொகுப்பில் ஒரு வரி கூட வரவில்லை. சென்னை நகர வரலாற்றில் இதுகாறும் எந்த ஒரு தமிழ் அறிஞருக்கும் மாநகரத் தந்தை சார்பில் இரங்கற் கூட்டம் நிகழ்ந்ததில்லை. தங்களைப் போன்றோர் ஊக்குவிப்பதனை என்போன்ற ஆர்வம் தழைத்த தமிழ்த் தொண்டர்கள் எதிர்பார்ப்பதில் தவறு இல்லையல்லவா? தங்கள் அன்புசான்ற, — **பி. எம். இரெக்சு**, மாநகரத்தந்தை, சென்னை-1

**0 : 834 :** வணக்கத்திற்குரிய ஐயா, அவர்களுக்கு, நேரில் இது வரையில் தங்களைப் பார்த்தறியா நான், தங்கள் அறிவின்பாற் கொண்ட பற்று அளப்பரியது. மொழிஞாயிறும் பாவாணரின் மறைவிற்குப் பின்னால், பெரும் இழப்பைச் சரிகட்ட உள்ள தங்களைப் பற்றிய செய்திகளை அறியவியலா நிலையில் இம்மடலை எழுதுகிறேன். நம்மின் தென்மொழியைப் படித்தவுடன் எனக்கொரு பெருமிதம்! உவகை! அதன் வழி ஒரு பற்றாளன் என்ற முறையில் நான் பெற்ற இன்பம், நான் என்றும் பெறவியலா ஒன்றேயாகும்! தமிழனின் ஏற்றத்திற்கு எழுச்சிப்பண் மீட்டும் தங்களின் பணி, தொண்டு என்றும் வேண்டும். — **வெ. மகராசன்,** (வளையபட்டி. (மதுரை).

**0 : 835 :** தனித்தமிழ்ப் பாவலரேறே! வணக்கம். நுமது சூளுரை நமது நெஞ்சகந்தோறும் நிறைந்து நிற்கிறது. தனித்தமிழ் அரிமா மொழிஞாயிறு, பாவாணர் மறைவுக்குப்பின் தமிழின் முதன்மையை உலகிடை நிலைநிறுத்திட முடியாத ஒரு வெற்றிடம் என்கண் முன்னே நிற்கையில், தங்களின் சூளுரை எங்கள் உள்ளங்கட்குத் தெம்பினை நல்குகிறது. தமிழ்ப் பகைவர்கள் பாவாணரின் சாவால் மகிழ்ந்து கூத்தாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் - எம் போன்றோர்க்குக் கையகத்து வேலென தங்கள் சூளுரை எம் நெஞ்சகத்து நிலைநின்று விட்டது. தமிழ்ப் பகைவர்களை விரட்டியடிக்கும் வரை ஓயமாட்டோம் என எம் போன்ற பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் **'தமிழே எனக்கோர் அறிவியக்கம்'** என்ற தங்களறிவு மொழியை உயிருடன் கலந்து விட்ட செவ்வுரையாகக் கொண்டு பணியாற்றக் காத்திருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். தமிழ்க் குமுகாயம் என்றும் தங்கள் பக்கமே என்பதைக் காலம் காட்டும். நாம் வெல்வோம். இஃது உறுதி.

— **ச. ந. ச. மார்த்தாண்டன்,** அறி. இ. வேலூர் 4.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

'கெஞ்சுவதில்லை பிறர்பால்,
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 17 ஓலை: 9
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
மேழம். தி. பி. உ0கஉ-
ஏப்பிரல்-மே-'81.



# தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்:
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி. ந. முத்துக்குமரனார் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ.
(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன

## பார்ப்பன எழுச்சியும் திராவிடர் கழகத்தின் முனைப்பும்! விரும்புகின்ற விளைவுகளும்!



திராவிடர் கழகத்திற்குச் சில வலிவான கொள்-கைகள் உண்டு. திராவிட இனக் காப்பு, சாதி, மத, மூட நம்பிக்கை முதலியன ஒழிப்பு, தமிழின நலமீட்பு, தமிழ்நாடு விடுவிப்பு முதலியவை அவை. இவற்றுள் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையை அக் கழகம் பெரியாருக்குப்பின் கை விட்டு விட்டதாக அறிவித்தது. மற்ற கொள்கைகளில் அது முழு அளவில் செயல்பட்டு வருகிறது. இது பின்பற்றும் கடவுள் மறுப்புக் கொள்கை என்பது பெரும்பாலும் இந்து மதம் என்னும் வேதமதக் கருத்துகளை முன் வைத்ததான ஒரு கொள்கை. மற்றபடி, அறிவியலுக்கு மிகப் பொருந்துவதான மெய்ப்பொருள் கொள்கையில் அவர்கள் அதிகம் கருத்துச் செலுத்துவதில்லை என்பதைத் தவிர, வேறு எதிரான கொள்கையை அது கொண்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை

அது தவிர, தமிழ்மொழி நலன் பற்றிய கூறுகளிலும் அவர்கள் மிகுந்த நாட்டம் கொண்டிருக்கவில்லை. இப்படிப்பட்ட ஓரிரு கருத்து வேறுபாடுகளைத் தவிர, நமக்கும் அக்கட்சியினர்க்கும் பெருத்த மாறுபாடுகள் வேறு இருப்பனவாக நாம் கருதுவதற்கில்லை. எனவே, இப்பொழுதுள்ள கால நிலையில், தமிழர்கள் தங்களுக்குள் மாறுபாடான கருத்துகள் எவை யெவை என்பதை ஆராய்ந்து அலசிப் பார்த்துக் கிண்டிக் கிளறிக் கொண்டிருப்பதைவிட, தாங்கள் ஒன்றுபடுவதற்குரிய அடிப்படைக் கருத்துகள் எவை என்பதைப் பற்றி எண்ணிப்பார்ப்பது இனநலத்துக் குகந்ததாக இருக்கும் என்று நாம் கருதுவதால், அதையொட்டிய சில எண்ணங்களை இங்குத் தெரிவிக்க முன் வந்துள்ளோம்.

பெரியாருக்குப் பின், அவர் அமைத்துக் கொடுத்த கட்சியமைப்பில் சிற்சில விரிசல்கள் ஏற்பட்டிருந்தாலும், பெரியாரின் திராவிடர் கழகத்தில் பெரும்பங்கைப், பற்றிக் கொண்டிருப்பதான, திரு. **கி.வீரமணி** அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட திராவிடர் கழகமே தாய்க்கழகமாகவும், மக்களிடையில் அவ்வகையில் மிகுந்த சாய்கால் உள்ளதாகவும், ஆற்றல் நிறைந்ததாகவும் இருந்து, செயல்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்ததே! எனவே, இற்றை நிலையில் பொதுவாக, **திராவிடர் கழகம்** என்பது திரு.**கி. வீரமணி** அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட கழகத்தையே குறிக்கும்; அவ்வாறு குறித்துக் கொண்டுமிருக்கின்றது.

இனி, திராவிடர் கழகம் **பெரியார்** காலத்திலும் சரி, திரு. **வீரமணி** அவர்களின் காலத்திலும் சரி, மக்கள் நலம் கருதும் செயல்களில், குறிப்பாகத் தமிழினத்திற்குப் பாடுபடும் செயல்களில், அதுவே இங்குள்ள பிற அரசியல், பொதுநலக் கட்சிகளை விட, மிகுந்த அளவில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட கட்சியாக இருந்தது; இன்னும் இருக்கிறது. ஒரு கட்சி, தன் கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கின்ற மாநாடுகளும், போராட்டங்களுமே, அதன் செயற்பாட்டைப் போதுமான அளவில் மக்கள் உணர்ந்து கொள்ளத் துணை செய்வன ஆகும். அவ்வாறு பார்க்கையில், திராவிடர் கழகம் பெரியார் காலத்திலேயே நடத்தி வந்துள்ள தன் கட்சி மாநாடுகளைத் தவிர, அது நடத்திய பகுத்தறிவு மாநாடு, பெண்கள் நலவுரிமை மாநாடு, இந்தி யெதிர்ப்பு மாநாடு, திருக்குறள் மாநாடு, சாதி யொழிப்பு மாநாடு, வகுப்படிப்படையில் பங்கு ஒதுக்கீட்டு மாநாடு (வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ மாநாடு) முதலிய பொது நலக் குறிக்கோளைக் கொண்ட மாநாடுகளும்' வீரமணி காலத்தில் நடைபெறும் இந்தி யெதிர்ப்பு மாநாடு, தமிழ் வழிபாட்டுரிமை மாநாடு, பெண்கள் விடுதலை மாநாடு, பார்ப்பன வல்லாண்மை (ஆதிக்க) எதிர்ப்பு மாநாடு, அண்மையில் குடந்தையில் நடந்த 'பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு' முதலிய மாநாடுகளும், அக்கழகக் கொள்கையின்

உறுதிப் பாட்டை நன்கு விளக்குவன ஆகும். இன்னும் பெரியார் நடத்திய போராட்டங்களும், வீரமணி நடத்தி வரும் போராட்டங்களும் (இந்தி யெதிர்ப்புப் போராட்டம், 'பிராமணர்' சொல்லழிப்புப் போராட்டம், கருவறைப் போராட்டம் முதலியன) முழுவதும் தமிழின நலங்கருதியவையே ஆகும். இவ்வகையில், **தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும், பதவி நலமும் அரசியல் ஊதியமும் கருதிப் போகையில், திராவிடர் கழகம் ஒன்றே முழுக்க முழுக்க தமிழின நலமும், தமிழர் இன இழிவு நீக்கமும் நாடிப் போகின்ற ஓர் இயக்கமாக நமக்குத் தென்படுகின்றது.** எனவே, திரு. வீரமணி அவர்கள் நடத்துகின்ற போராட்டங்களுக்கு நம் முழு ஆதரவையும் தரவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த வகையிலேயே, அண்மையில் குடந்தை நகரில் திராவிடர் கழகம் நடத்திய, பார்ப்பனர் வல்லாண்மை ஒழிப்பு மாநாட்டில் நாம் கலந்து கொண்டு, அதைத் தொடக்கி வைக்கவும் நேரிட்டது என்க.

இனி, இக்கால் ஆரியப் பார்ப்பனர்கள் தமிழர்களின் இன நல வுரிமைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் இடங் கொடுக்காத வகையில், நாடு முழுவதும் போராடி வருவது, மிகுந்த வருத்தத்துடனும், அச்சுறையுடனும் கவனிக்க வேண்டியதும் உடனடியாக ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுமான நிகழ்ச்சியாகவும் இருக்கிறது. பார்ப்பனர் எழுச்சி நம்மையெல்லாம் விழிப்புக் கொள்ளச் செய்திருக்கின்றது. நூற்றுக்கு மூன்று அல்லது ஐந்து பேராக உள்ள அவர்கள், பிற திரவிட இனத்தவரின் அனைத்து நலன்களையும் முற்றூட்டாகவும் முழுவுரிமையாகவும் கைப்பற்றி நுகர்ந்து வருவது அடாவடித்தனமும், அறக் கொடுமையானதும் ஆகும். புராண, இதிகாச கால முதல் இன்று வரை சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும், அரசியலின் பெயராலும், பார்ப்பனர்கள் வாழ்வு நலந்தரும் அனைத்துத் துறைகளிலும் வல்லாளுமை (ஆதிக்கம்) செய்து வரும் கொடுமையும் துன்பமும், அதன் கீழ் உழன்று, இழிக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் கிடக்கின்ற திரவிட இன மக்களுக்குத்தான் தெரியுமே தவிர, பிற இனத்தார்க்கோ, வெளிநாட்டவருக்கோ இம்மியும் தெரியாது. இப்படிப்பட்ட நிலையே தொடர்ந்து நீடிக்கப் பெற வேண்டும் என்பதே பார்ப்பனர்களின் கோரிக்கை என்பது, அண்மையில் நடந்து வரும் குசராத்து, இராசத்தான் முதலிய வட மாநிலங்களில் நடைபெறும் போராட்டங்களால் தெரிய வருகிறது. இனி, தென்னாட்டிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் அவை போன்ற போராட்டங்களைத் தொடங்குவதற்குத் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் முயற்சியும் முனைப்பும் செய்வதாகத் தெரியவும் வருகிறது.

கடந்த காலங்களில் பார்ப்பனர்களால் தமிழர்களுக்கும் பிற திரவிட இனத்தவர்க்கும் நேர்ந்த துன்பங்களும் கொடுமைகளும் கொஞ்ச நஞ்சமன்று. கல்வி, தொழில், கலை, பண்பாடு, சட்டம்

ஆளுமை, பதவி, அதிகாரம், முதலிய ஆட்சித் தொடர்புத் துறைகளிலும், செய்தித்தாள்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி முதலிய பொதுமக்கள் தொடர்புத் துறைகளிலும் பார்ப்பனர்களின் மேலாளுமையே பல நூறு மடங்கு மேலோங்கியுள்ளது. இதன் உண்மையை அவ்வத்துறைகளின் புள்ளி விளத்தங்களைப் பார்த்தால் நன்கு விளங்கும். பார்ப்பனரைத் தவிர மற்ற இனங்களுக்கோ, அஃதாவது சூத்திரர்களுக்கோ 'பார்ப்பனனைப் பணிந்து அவனுக்குப் பணிவிடை செய்து மகிழ்ச்சியூட்டுவதே மேலான அறம் (தர்மம்); மற்றவையெல்லாம் பயனில்லாதவை' (மனு 10 : 123) என்றும், 'சூத்திரன் 'சுவர்க்க'த்திற்காவது, பிழைப்பிற்காவது பார்ப்பனனையே தொழ வேண்டும்' (மனு 10 : 122) என்றும் கூறப் பெற்ற குமுகாய வரைமுறைகளின் படியே இன்னும் நடந்து வர வேண்டும் என்று ஆரியப் பார்ப்பனர்கள் விரும்புவது எத்துணை கொடுமையானது! சட்டம் என்னும் அரசியல் நெறிமுறையும், அறம் (தர்மம்) என்னும் குமுகாய நெறிமுறையும் பார்ப்பனர் நலத்துக்கே சார்பாக அமைந்திருப்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். 'இந்த தேசத்தில் பிறந்த பிராமணர்களிடமிருந்துதான் மற்றவர்கள் எல்லா 'தர்மத்'தையும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்' என்பது மனுநூலின் கொள்கையாக (மனு : 2 : 20) இருப்பதற்கு இந்நாட்டு அமைச்சர்களில் எவரேனும் அமைவு சொல்ல முடியுமா? அல்லது அவ்வாறு இல்லை என்று மறுத்துத் தருக்கமிட முடியுமா?

இந்த நிலையில் கீழே வீழ்த்தப் பெற்ற திராவிட இன மக்கள், நீண்ட நெடுங்காலத் துயிலினின்று, இன்று, ஒருவாறு விழித்துக் கொண்டுள்ளனர். இந்த விழிப்புணர்வு, தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில், **தந்தை பெரியாரின்** கடந்த முக்கால் நூற்றாண்டுக் காலத் தொண்டாலும், வட நாட்டில் பேரறிஞர் **பர். அம்பேத்தார்** போன்றாரின் அரு முயற்சியாலுமே ஏற்பட்டு, இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது என்பதை எவரும் மறுத்து விட முடியாது. இனி, இவ்வெழுச்சி யுணர்வு இந்தியா முழுவதுமே இக்கால், கிளர்ந்து பரவி வருகின்ற தெனினும், தென்னாட்டில் அது தீ வடிவில் பரவிப் புயலாக உருவெடுத்து வருகின்றதென்றே சொல்லுதல் வேண்டும். பெரியார் இல்லாத காலத்திலும், அவரால் ஊட்டப் பெற்ற இவ்வினவுணர்வு, இவ்வாறு கொழுந்து விட்டுப் படர்ந்து பற்றி எரிவது, இன்றுள்ள திராவிடர் கழகத்தின் தொடர்ந்த செயற்பாடுகளாலும், அதன் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களாலுமே என்பது சிறிதும் மிகையான கூற்றாக இருக்க வியலாது. தமிழர் நலம் கருதி, அவ்வப் பொழுது நம் இனவுணர்வு கிளர்ந்தெழும் வண்ணம்' அவர் ஆற்றி வரும் அன்றாடச் சொற்பொழிவுகளும், எழுதி வரும் எழுத்துகளுமே நம் கூற்றுக்குச் சான்று பகரும். தமிழ் நாட்டில் பெரியாரை விட வேறு எவரும், மக்களுக்கு அறிவூட்டும் முயற்சியில் இவ்வளவு மிகுதியாகப் பேசியதும் இல்லை; எழுதியதும்

இல்லை. அதற்கடுத்தபடி அன்பர் வீரமணி அவர்கள் பெரியாரின் அப்பணியை அதே வகையில் தொடர்ந்து வருவது நமக்குப் பெரிதும் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

எவ்வாறேனும், இந்நூற்றாண்டின் இறுதிக்குள்ளாகவேனும், தமிழினம் முழு மீட்சி பெற்றாக வேண்டும். மொழியியல் வரலாற்றில் தாய்த் தமிழைத் தொடர்ந்து, பிற திரவிட மொழிகள் எவ்வாறு படிப்படியாய்த் தோன்றி விரிவடைந்து பெருகினவோ, அவ்வாறே, தமிழினத்தில் ஏற்படப்போகும் இவ்வின மீட்சியுணர்வு வளர்ச்சியுற்று, பிற திரவிட இனங்களையும் மிக விரைவில் பற்றுவது மிகவும் உறுதியும், நடைபெறப் போகும் உண்மையுமாகும். அப் பெரும்புரட்சிக்குப் புறநிலையில், நண்பர் திரு. வீரமணி அவர்களின் உழைப்பு மிகவும் உறுதுணையாக நிற்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. இந்த உண்மையைக் கண்ணுக்குக் கண்ணாக நாம் குடந்தையில் இரண்டு நாட்களிலும் நடைபெற்ற மாநாடுகளில் காண நேர்ந்தது. அதன் பின்னர்தான் அவரின் இந்த இன மீட்சிப் போராட்டத்திற்கு தோளுக்குத் தோளாக நின்று ஊக்க மளிப்பது என்று நாம் உறுதி பூண்டோம்.

மொழி, நிலையில் நம் பாதை, திராவிடர் கழகத்தினர்க்குச் சற்று மாறு பட்டதுதான் எனினும், மொழியை அடியொட்டிய இன நலத்திலும், நாட்டு வரலாற்று மீட்சியிலும் நமக்கும் அவர்களுக்கும் நூற்றுக்கு நூறு ஒப்பமுடிந்த இணையான பாதையாகவே உள்ளது. எப்படியும், பார்ப்பனியம் கடந்த மூவாயிரமாண்டுகளாகக் கால் வைத்துப் பரப்பிக் கொண்டுள்ள கொடுநிலையை இத்தலைமுறையிலேயே அகற்றியாகல் வேண்டும். அதன் ஆணிவேரையும் பக்கசல்லி வேரையும் வேரடி மண்ணையும் அடியோடு கல்லி எடுத்து எரித்துச் சாம்பலாக்கியே ஆகல் வேண்டும். அதன் முடிவு தமிழினத்தின் அழிவாகவும் இருக்கலாம்; அல்லது தன் கூரிய நச்சுப் பற்களால் இத்திரவிட இனத்தைக் குறிப்பாகத் தமிழினத்தைக் கவ்விப் பிடித்தபடி, அனைத்து நிலையிலும் அதன் வாழ்வியல் நலக் குருதியை உறிஞ்சி உயிர் குடிக்கும் பார்ப்பனியக் கொடும் பாம்பைச் சாகடிப்பதாகவும் இருக்கலாம். இவ்வரும் பெரும் பணிக்கு மற்ற தலைவர்களெல்லாம் காலெடுத்து வைக்கவும் அஞ்சும் போராட்டக் களத்தில், போர்ப் பரணி பாடிக் கொண்டு இறங்கித் தம்மையே ஈகம் செய்து கொண்டுள்ளார் திருவாளர் கி. வீரமணி அவர்கள். அவர்களின் தமிழின மீட்புக்கான அனைத்து முயற்சிகளுக்கும் நாம் தோள் தருவோம் என்று உறுதி கூறுகிறோம். அத்துடன் இறுதியாகத் தமிழினத்திற்கு நாம் சொல்லிக் கொள்வது, இது : **வீரமணி தமிழ் இனத்திற்குக் கிடைத்த ஒரு வயிரமணி !** அவர் முயற்சி வெல்க!

— **பெருஞ்சித்திரன்**

# செய்திகள்

**1. அன்புகுமார் — வசந்தி வாழ்க !**

கடந்த மீனம் 10 (23-3-81) அன்று, திட்டச்சேரி பா. கண்ணன்- பேபி அவர்களின் மகன் செல்வன் க. **அன்புகுமாருக்கும்** செயராமன் அவர்களின் மகள் செல்வி **வசந்திக்கும்,** திருவண்ணாமலை தேரடி தெரு, காமட்சியம்மன் திருமணக் கூடத்தில், முத்தமிழ்க் காவலர் திரு. **கி ஆ. பெ. விசுவநாதம்** அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. மணமக்களை வாழ்த்தி, பாவலரேறு **பெருஞ்சித்திரனார்,** வழக்கறிஞர் திரு. **பாண்டுரங்கன்** ஆகியோர் சிறப்புரையாற்றினர். இனிய விருந்துக்குப்பின் மணவிழா நிறைவு பெற்றது.

**2. செஞ்சி, திருக்குறள் பேரவை நிகழ்ச்சி :**

கடந்த **23-3-81** அன்று மாலை 7 மணியளவில், செஞ்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகத்தில், திருக்குறள் பேரவை நிகழ்ச்சி, புலவர். திரு. **இரா. சிங்காரம்.** க. மு; ஆ. ப. அவர்கள் தலைமையில் நடந்தது. புலவர் திரு. **க. நடராசன்** வரவேற்புரை நிகழ்த்தினர். புலவர் திரு. **கோ. தமிழரசன்** இல. இ. அறிக்கை படித்தார். தலைவரின் அரிய முனனுரைக்குப் பின், பாவலரேறு **பெருஞ்சித்திரனர்** அவர்கள் **'இனிமைத் தமிழ்மொழி எமது'** என்னும் தலைப்பில் இரண்டரை மணிநேரம் அரியதோர் ஆய்வுப் பொழிவை நிகழ்த்தினர்கள். இவ்வுரை இவ்வட்டாரத்தில் நல்ல தூய தமிழ்ப் பற்றை ஊட்டுதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது என்று அன்பர்கள் பலரும் மகிழ்ந்தனர். இறுதியில் புலவர் திரு. பரசுராமன் நன்றி நவில நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

**3. பார்ப்பன வல்லாண்மை ஒழிப்பு மாநாடு, குடந்தை :**

திராவிடர் கழகச் சார்பில், கடந்த 29, 30-3-81 ஆகிய நாட்களில், குடந்தையில் 'பெண்கள் விடுதலை மாநாடு' 'வகுப்புரிமை மாநாடு' 'பார்ப்பன வல்லாண்மை (ஆதிக்க) ஒழிப்பு மாநாடு' ஆகிய மூன்று மாநாடுகள் மிகவும் சிறப்பாகவும் வீறு பெறவும், நடைபெற்றன. மூன்று மாநாடுகளிலும் கழகப் பொதுச் செயலாளர் மானமிகு. **கி. வீரமணி** அவர்களும், அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றினர். 2-ஆம் நாள் நடைபெற்ற பார்ப்பான வல்லாண்மை ஒழிப்பு மாநாட்டிற்கு பண்ணுருட்டி நா. நடேசனுர் தலைமை தாங்கினர். மாநாட்டைப் பாவலரேறு **பெருஞ்சித்திரனர்** தொடங்கி வைத்து, தமிழின உணர்ச்சி பொங்கும் வீரவுரை யாற்றினர். அடுத்துக் கருநாடக மாநிலப் பகுத்தறிவாளர் கழகத் தலைவர் திரு **வி. டி. இராசசேகரன்** சிறப்புரையாற்றினர். இறுதியில் மானமிகு. **கி வீரமணி** மனு அதர்ம நூற்

படிகளை மே 17-ஆம் பக்கல் எரித்துச்சாம்பலாக்கும் தீர்மானத்தைக் கூறி விளக்கினார். மாநாட்டில் பெருங்கூட்டம் நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பிறசெய்திகள்.

**1. சுப்பிரமணியன் — கலியாணி வாழ்க :**

திருச்சி தென்மொழி முகவரும், இளங்கோ புத்தக நிலைய உரிமையாளரும் ஆகிய திரு. ஆ. பழ. குமரப்பன் அவர்களின் தலைமகள் கலியாணி என்னும் மணிமேகலைக்கும், வலையப்பட்டி சுப்பிரமணியனுக்கும், கடந்த 16-3-81 காலை, வேகுப்பட்டியில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் நீடுழி வாழ்க என தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

**2. பாவாணர் நினைவரங்கம் கோவை :**

கடந்த மீனம் 2 (15-3-81) காலை 10 மணியளவில், கோவை, பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில், வடகோவை, கல்வியகத்தில், பாவாணர் நினைவரங்கம் நடைபெற்றது. பேரா. கு. வெ. கி. ஆசான். க. மு. தலைமையேற்றார். புலவர் தென்மொழி ஞானபண்டிதன் வரவேற்புரையாற்றினார் தொடக்கத்தில் மொழிஞாயிறு பாவாணர்க்கு இரங்கல் தெரிவிக்கப் பெற்றது. திருவாளர்கள் சூ. மி. காளிமுத்து, க. மு; பேரா. மு. தமிழ்க்குடிமகன் க. மு. ஆகியோர் உரையாற்றினர். திரு. செந்தலை ந. கவுதமன் க. மு நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

---

## பாவலரேறு - அந்தமான் புறப்பாடு.

"அந்தமான் தென்மொழி மன்ற" அழைப்பின் பேரில் தென்மொழி ஆசிரியர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்களும் ஈரோடு பாவலர் **குமர நடவரச ஈவப்பனார்** - அவர்களும் 18-4-81 அன்று மாலை 4 மணி அளவில் 'நான்கவுரி' - கப்பல் வழி அந்தமான் புறப்பட்டுச் சென்றார்கள். சென்னை - தென்மொழி அன்பர் குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினரும், தென்மொழிக் குடும்பத்தினரும் வழியனுப்பிவைத்தனர். அந்தமான் தமிழர்களின் மொழி உணர்வு கிளர்ந்தெழ இச்செலவு சிறந்த வாய்ப்பாக இருக்கும் எனக் கருதுகிறோம். — **அமைச்சர்.**

---


# விற்பனையாளர்கள் தேவை!

மதுரை, சேலம், தஞ்சை, ஆகிய நகர்களுக்கு **தென்மொழி, தமிழ்ச்சிட்டு,** விற்பனைப் பொறுப்பேற்க முகவர்கள் (Agents) தேவை. முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் உடனே தொடர்பு கொள்க. — **அமைச்சர், தென்மொழி, சென்னை-5.**

## நன்கொடைகள்

### 4-4-81-ஆம் நாள் வரை நன்கொடை வரவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 2-3-81 | இரணியன், கோவை. (மார்சு, ஏப்பிரல்) | 20-00 |
| 2. | 7-3-81 | அவநாசி, தென்மொழியன்பர் அர. முருகேசன்-தங்கமணி அவர்களுக்குப் பிறந்த ஆண்மகவு திருச்செந்தில் நினைவாக | 5-00 |
| 3. | 9-3-81 | திருப்பூர் தென்மொழியன்பர் கா. சு. சட்டநாதன்-வெற்றிச் செல்வி ஆகியோர்க்குப் பிறந்த பெண்மகவுக்கு மங்கையர்க்கரசி எனப் பெயரிட்டதன் நினைவாக | 10-00 |
| 4. | 9-3-81 | தாராபுரம், கதிரேசன்-சுந்தராம்பாள் அவர்களுக்குப் பிறந்த ஆண்குழந்தைக்கு எழிலரசு எனப் பெயரிட்டதன் நினைவாக | 10-00 |
| 5. | 13-3-81 | சென்னை, சித்த மருத்துவ ஆய்வுக் கழக தலைவர் நிலாவழகன், காப்பாளர் 'மூலிகை மணி' வெங்கடேசன் | 10-00 |
| 6. | 14-3-81 | தென்மொழி யன்பர்கள் சாம்பசிவம், காசிநாதன், இராசேந்திரன், சோம சுந்தரம், படைத்துறை, மேகலாயா. | 20-00 |
| 7. | 17-3-81 | கவின் மருத்துவ மனை, மருத்துவர் இளங்கோ, ஈரோடு. | 200-00 |
| 8. | 17-3-81 | வெ. சி. தங்கவேலு, பள்ளிபாளையம், | 29-00 |
| 9. | 18-3-81 | கா. இளமுருகன், செயலர், மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி. | 25-00 |
| 10. | 19-3-81 | செ. சு. ஈசுவரமூர்த்தி, பல்லடம். | 5-75 |

0 நன்கொடை நல்கிய தூய தமிழ் நெஞ்சங்கட்கு நன்றி.

0 குழந்தைகள் திருச்செந்தில், மங்கையர்க்கரசி, எழிலரசு நீடுழி வாழ தென்மொழியின் உளமார்ந்த வாழ்த்துகள் !

---

# இலக்கணம்; இசை வகுப்புகள்.

கடந்த மீனம் உ௨ *(4-4-1981)* முதல், **'நலவினை ஆய'**த்தின் சார்பில், கீழ்க்காணும் வகுப்புகள் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றன : *(1)* தொல்காப்பிய வகுப்பு —
**(ஆசிரியர் : புலவர். இறைக்குருவனார்)**

*(2)* இசை (வாய்ப்பாட்டு) வகுப்பு —
*(ஆசிரியர் : புலவர். **சுரும்பியன்**)*

பாட்டெழுத விரும்புவோர்க்கு, விரைவில் **'பாவலர் வகுப்பு'**களும் தொடங்கப் பெறும் ! ஆர்வமுடையோர் தொடர்பு கொள்க :

**தென்மொழி ப முருகவேள்,** வினையாளர் — ''நலவினை ஆயம்'' 'பஃறுளி முன்றில்' - 23, கோயில் குறுஞ்சாலை, திருநகர் குடியிருப்பு, சைதை, சென்னை-600 015.

# உரைவேந்தர் ஔவை துரைசாமியார் வாழ்க்கை வரலாறு.

**தி. நா. அறிவுஒளி, க., மு., கல். இ.,**

தமிழ்மொழி உலகின் முதல் மொழியாகும். தமிழில் உரைச் செய்யுள், பாச்செய்யுள் என இருவகை இலக்கியவகைகள் பண்டைக் காலத்திலிருந்தே விளங்கின. பாட்டுக்கு உரை எழுதும், உரை கூறும் மரபும் மிகப் பழமையானது. தொல்காப்பியத்திற்கு இளம் பூரணர், பேராசிரியர், நச்சினர்க்கினியர், சேனவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர் முதலிய பெரும் புலவர்கள் அருமையான உரை விளக்கம் எழுதியுள்ளனர். சிந்தாமணிக்கும் பத்துப்பாட்டுக்கும் நச்சினர்க்கினியர் அரிய உரை வரைந்துள்ளார். திருக்குறளுக்குப் பரிமேலழகர், காலிங்கர், பரிதியார், மணக்குடவர் முதலியோர் உரை கண்டுள்ளனர். இறையனர்களவியலுக்கு நக்கீரனர் உரை கூறியுள்ளார். சிலம்புக்கு அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் உரை வகுத்துள்ளனர். மற்றும் பலர் உரை யாசிரியர்களாக விளங்கியுள்ளனர்.

நம் காலத்தில் பண்டை உரையாசிரியருக்கு இணையாக ஒரு பெரும் புலவர் வாழ்ந்தார். அவர்தாம் **ஔவை சு. துரைசாமியார்.** இவர் உரையெழுதும் புலமைத் திறமைக்காக **'உரைவேந்தர்'** எனச் சிறப்புப் பெயர் பெற்றவர்.

தமிழ் நாட்டில், தென்னர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் என்னும் நகருக்கு அருகில் *ஔவையார் குப்பம் என்னுஞ் சிற்றூர் உள்ளது. அவ்வூரில் திரு. சுந்தரனர் அவர்கட்கும், திருவாட்டி. சந்திரமதியம்மையாருக்கும் 5-9-1902 - இல் ஓராண்மகவு தோன்றியது. அக் குழந்தையே ஔவை துரைசாமியார். இரட்டைக் குழந்தையில் ஒருவர் நம் ஔவை. இரட்டையில் இன்னெரு குழந்தை பெண்ணகும். அக் குழந்தைக்குப் பூமாதேவி எனப்பெயரிட்டனர். திரு. சுந்தரனர் ஊர் கணக்கராகப் பணியாற்றினர். தமிழில் ஆர் வமும் அறிவும் வாய்ந்தவர். மயிலம் முருகன் மீது பல செய்யுள் நூல்கள் பாடியுள்ளார்.

துரைசாமியார் ஐந்தாம் குழந்தை யாவார். துரைசாமியாருக்கு முன் திரு. மயிலாசலம், திரு. முத்துக்குமாரசாமி, திரு. சுப்பிர மணியம் என்னும் மூவர் மூத்தவர் பிறந்தனர். தாய்ப்பால் இல்லாமல்

---

*'பந்தன்' என்ற வள்ளலுக்குரிய ஊர் பந்தமங்கலம். இவ்வூருக்கு மேற்கு எல்லையாக ஔவையார் குப்பம் அமைந்துள்ளது. மயிலத்தி லிருந்து வந்தவாசி செல்லும் சாலையில் மயிலம் புகைவண்டி நிலை யத்துக்கு வடமேற்கே இரண்டுகல் தொலைவில் இருக்கும் ஊர் இது.

வளர்ந்த பிள்ளை நம் துரைசாமியார். தொடக்கக் கல்வி கற்றபின் உள்ளூரில் கல்வி கற்க வாய்ப்பில்லை. இந்நிலையில் ஔவையின் தந்தையாரும் இயற்கையெய்தினர். குடும்பத்தின் மூத்த பிள்ளை மயிலாசலனார் குடும்பப்பொறுப்பைஏற்றுக் கொண்டார். மயிலாசலனருக்குப் புண்ணிய கோடியம்மையார் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார்.

ஔவை துரைசாமியார் திண்டிவனம் அமெரிக்கன் ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில் (இப் போது அப் பள்ளி வால்டர் இசுகடர் உயர்நிலைப் பள்ளி என வழங்குகிறது. அந் நாளில் இப் பள்ளியை ஏ. ஏ. எம். உயர்பள்ளி என்பர்.) பள்ளியிறுதி வகுப்பு வரை பயின்றார். உயர்பள்ளியில் பயிலும் போதே தமிழில் தனியார்வமுடையவராக ஔவை விளங்கினர். அப்பள்ளியில் சீகாழி கோவிந்தசாமி என்னுந் தமிழாசிரியர் ஔவைக்கு ஆசிரியராக அமைந்தார். அவர் வீட்டிலிருந்த ஓலைச் சுவடிகளை ஔவையும் ஆய்ந்து படிப்பது வழக்கமாகும்.

'ஐங்குறு நூறு' என்னும் கழகக் கால இலக்கியத்தை அந்நாளிலேயே கற்றார். பின்னே அச்சுவடியைப் பயன்படுத்தி ஐங்குறு நூறு நூலுக்கு அரிய ஆய்வுரை எழுதினர் ஔவை. கல்லூரிக் கல்வி வேலூர் ஊரிசு கல்லூரியில் சிறிது காலம் அமைந்தது. கல்வி முடிந்ததும் வாழ்க்கைப்பாட்டுக்கு வருவாய் தேடவேண்டிய நிலை நேர்ந்தது. தொடக்கத்தில் உடல் நலத் தூய்மைக் கண்காணிப்பாளராகப் பணியேற்றார். இப் பணியில் ஆறு திங்கள் மட்டுமே ஈடுபட்டிருந்தார். தமிழை முறைப்படிக் கற்று புலமை பெற வேண்டுமென ஔவை எண்ணினர்.

கரந்தையில் நாவலர் ந. மு. வேங்கடசாமி அவர்களிடமும், கரந்தைப் பாவரசு. வேங்கடாசலம் அவர்களிடம் கழக இலக்கியங்களையும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் கற்றார். ஆழ்ந்த புலமை பெற்றார். சைவசமயக் கல்வியைத் திரு. கந்தசாமி தேசிகர், தவத்திரு. வாலையானந்த அடிகள் ஆகியோரிடம் கற்றார். 1930-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்துவான்' பட்டமும் பெற்றார். வடார்க்காடு மாவட்டக் கழக உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்றார். காவிரிப் பாக்கம், செங்கம், செய்யாறு, போளூர் போலும் ஊர்களில் ஔவை தமிழாசிரியராக விளங்கினர். அக்கால ஆட்சியாளர் போக்கால் உரைவேந்தர் அடிக்கடி மாறுதல்களுக்குட்பட நேர்ந்தது. செய்யாற்றில் ஔவையவர்களுக்கு மாணாக்கராகப் புலவர் கா. கோவிந்தன் இருந்தார்.

செய்யாற்றில் தொடர்ந்து திருக்குறள் வகுப்புகள் நிகழ்த்தினர் ஔவை. அப் பேருரைகளைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சியினின்றும் வந்து கேட்டு மகிழ்ந்திருக்கிறார். அக்காலத்தில் அண்ணா அவர்கள் மிகப் பெருந்தலைவராக அறிமுகமாகாதிருந்தார்.

ஔவை துரைசாமியாருக்குத் திருவாட்டி. உலோகாம்பாள் என்னும் அம்மையாரை மண முடித்தனர். வாழ்க்கை இடர்ப்பாடுகள் ஔவையின் தண்டமிழ்த் தொண்டுக்கு இடையூறு இல்லாத வகையில் தற்காத்துத் தற்கொண்டாற் பேணி இல்லறமாற்றினர் அம்மையார். கற்றல்-கற்பித்தல், நூலாராய்தல்—நூல் இயற்றுதல் என்பதே உரை வேந்தரின் வாழ்க்கைக் குறிக்கோளாகவும், வாழ்வாகவும் அமைந்தது.

அந் நாளிலேயே தந்தை பெரியார் அவர்களிடமும், அவரது சீர் திருத்தக் கருத்துகளிடமும் பேரீடுபாடுடையவராக ஔவை விளங்கினர். ஔவை அவர்கள், ''பெரியார் தமிழின எழுச்சிக்குப் பாடு பட்டுவரும் தமிழின முனிவர்' எனப்பாராட்டுவார். போளூரில் ஔவையவர்கள் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது பெரியார் திருவுருவ ஓவியத்தைக் (மிகப் பெரிய அளவுடையது) கண்ணாடிச் சட்டமிட்டுச் சுவரில் மாட்டியிருந்தார். அவ்வூரினின்றும் வேற்றூருக்கு ஔவை மாற்றப் பட்டார். அப்போது போளூரில் காலகக்-(சோடாக்) கடை வைத்திருந்த திரு. மாணிக்கம் என்பவரிடம் அப் பெரிய படத்தை அன்பளிப்பாக அளித்துப்பேணும்படி கூறி வந்தார்.

பெரியாரின் இந்தி யெதிர்ப்புப் போரில் பேரார்வம் கொண்டார் ஔவை. இந்தி எதிர்ப்புக்கும் தன்மதிப்பியக்கக் கருத்துகளை ஏற்றுப் பரப்புவதிலும் அந் நாளில் தமிழ்ப் புலவருலகில் ஔவையே துணிந்து ஈடுபட்டார். தமிழ்ப் பகைவரைத் தம் பகைவராகக் கருதுமியல்பினர் ஔவை. கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியிலும் சில காலம் ஆசிரியராக விளங்கினர்.

உயர் பள்ளிப் பணியில் ஔவைக்கு அடிக்கடி அரசியல் காரணமாக இடையூறுகள் ஏற்பட்டமையால் பள்ளியிற் பணியாற்றுவதனின்றும் நீங்கித் திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியிற் பேராசிரியராகப் பணியேற்றார் ஔவை. அங்கு அருந்தமிழறிவுறுத்தும் பெரும் பணியினால் பலர் மாணாக்கராக அமைந்து பயன் பெற்றனர்.

அப்போது நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி அவர்கள், ''மணிமேகலையில் அமைந்துள்ள சமயப் பகுதிகளுக்கும், தருக்கப் பகுதிகளுக்கும் சீரிய கூரிய உரை காணவேண்டும்'' எனப்பணித்தார். அதற்கு உடன் பட்ட ஔவை வடமொழி நூல்களையும், வடமொழி வல்லாரையும் நன்கு பயன்படுத்தி அரிய உரை வரைந்துதவினர். ஔவைக்கு 'யசோதரகாவியம்' என்னும் சமண சமய இலக்கிய ஓலைச் சுவடி கிடைத்தது. அதை நன்றாக ஆராய்ந்து உரை எழுதி வெளியிட்டார்.

உரை எழுதுவது எளிய செயலன்று. ஒரு நூலை முறையாகக் கற்றுத் தெரிய வேண்டும். அந்நூலின் நுட்பமெல்லாம் ஆராய்ந்

தறிய வேண்டும்; அதில் அமைந்துள்ள இலக்கண அமைதி, மரபு, குறிப்புப் பொருள், சொல்நயம், பொருள்நயம், மறைபொருள் முதலிய வற்றை ஆராய்ந்து மக்களுக்குத் தெளிவாக உணர்த்த வேண்டும். ஓர் உரை எழுதி வெளியிடும் ஆசிரியர்க்கு நூலறிவு, கேள்வியறிவு, உண்மையறிவு ஓயா உழைப்பு ஆகியவை கட்டாயம் இருத்தல் வேண்டும். கற்றலும் கேட்டலும் ஆய்தலும் அஞ்சாது எழுதுதலும் ஆகிய இயல்புகள் இளமை முதலே ஔவையவர்களிடம் அமைந் திருந்தன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஔவையவர்களைத் தமிழ்த் துறையில் சேர்த்துக் கொண்டது. அப்போதுதான் 'சைவ சமய இலக்கிய வரலாறு' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். ஐங்குறுநூறு உரை வெளியிட்டார்.

திரு. சு. வையாபுரியார் உதவியால் 'நற்றிணை ஏடு' பெற்றார். அவர், 'இது மதுரைத் தமிழ்ச் சங்க ஏடு; இதனை நன்கு ஆராய்ந்து உரையெழுதி வெளியிடவேண்டும்'' என்றார். அதனுடன் வேறு பல ஏட்டுச் சுவடிகளையும் ஒப்பிட்டு ஆய்ந்தார். மூவாயிரத்துக்குக் குறையாத பாட வேறுபாடுகளை ஆராய்ந்து, தக்க பாடம் இது எனத் தெள்ளித் தெளிந்து விளக்கவுரையும் எழுதி வெளிப்படுத்தினர். சைவசமய நூலாகிய 'ஞானாமிர்தம்' 'இரும்புக்கடலை' போன்ற பாடல்களையுடையது என்று சொல்வார்கள். அதை ஆராய்ந்து விளக்கம் எழுதி அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளி யிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்போது வரலாற்றுக் - கல்வெட்டுப் பேரறிஞர் தி. வை. சதாசிவ(பண்டார)த்தார் அவர் களும் திருமுறை வரலாற்றாசிரியர் முதுபெரும்புலவர், க. வெள்ளை வாரணர் அவர்களும் பணியாற்றினர். அவ்விருவருடன் நெஞ்சு கலந்துபழகி உயிர் நண்பரானார் ஔவை.

திரு. இராசாளியார் வைத்திருந்த புறநானூறு ஓலைச் சுவடி சேனை நாட்டாரிடம் இருந்தது. அதை ஆராய்ந்தார் ஔவை. அதற்குமுன் வெளிவந்த புறநானூற்று நூலில் காணக்கிடைக்காத பாட வேறுபாடுகளும் திருத்தங்களும் இவ் வேட்டில் இருந்தன. அதனால் இவற்றை ஒப்பிட்டு ஆய்ந்து அரிய விளக்கவுரைகள், குறிப் புகள்எழுதிப் புறநானூற்றை வெளியிட்டார். புறநானூறு ஒப்பு நோக்கி ஆராயும் பணி 27. சூன் 1927-இல் நிறைவேறியது.

1947-இல் புறநானூறு (1–200 பாடல்கள்) முதற் பகுதியும், 1951-இல் பதிற்றுப் பத்து விளக்கவுரை பகுதியும், 1951-இல் புற நானூறு (201-400) இரண்டாம் பகுதியும் வெளிவந்தன.

ஔவை அவர்களுக்குக் கல்வெட்டுப் பயிற்சி மிகுதியாயிருந்தமையால், கழகக் கால ஊர்கள், நகரங்கள், இடங்களை இனத்தெனத் தெளிவாக ஆய்ந்துணர்த்த முடிந்தது.

பதிற்றுப்பத்து உரை எழுதும் நாளில் மலையாள நாட்டில் விரிவாகச் சுற்றுலாச் சென்று வரலாற்று மாட்சியுடைய இடங்களை நேரில் கண்டு ஆராய்ந்து உரை எழுதினர். பல வரலாற்றாசிரியர்கள் பிழையாகக் கருதி எழுதிய செய்திகளை விலக்கி, உண்மையை ஔவையவர்கள் எழுதி உணர்த்தினர்.

பின், மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இணைந்தார். பல்லாயிரக் கணக்கான மாணுக்கர் உரைவேந்தர் பால் தமிழ்கற்று அறிஞர் ஆயினர்.

இவர் இல்லற வாழ்வின் பயனாக திரு. ஔவை நடராசன் (மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர், தமிழக அரசு) ஔவை. திரு நாவுக்கரசு, ஔவை ஞானசம்பந்தன் (மாநிலக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர்) திரு. மெய்கண்டான் (மருத்துவர்), திரு. நெடுமாறன் திருவாட்டியர். பாலகுசம் அம்மையார், மணிமேகலை, திலகவதியம்மையார், தமிழரசியார் ஆகியோர் அறிவறிந்த நன்மக்களாக வாய்த்தனர். பாவேந்தரின் பகுத்தறிவுக் கொள்கையும் தன் மதிப் பியக்க ஈடுபாடும் பழமைப்பற்றுள்ள புலவர் பலர்க்கு அவரிடம் ஈடுபாட்டை உண்டாக்கியதில்லை. ஆயின், ஔவையவர்கள் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்னும் சிறு பாவியத்திற்கு ஆய்வுரை எழுதிப் பாராட்டினர் அன்றே !

பாவேந்தர் உரை வேந்தரை மிகவும் மதித்துப் போற்றினர்.

நாகர்கோவில் புலவர் குழுக் கூட்டம் நிகழ்ந்தது. பாவேந்தர் ஒரு பக்கம் வேறொரு நண்பரோடு பேசியிருந்தார். அப் பக்கமாக ஔவை வந்தார். அதைக் கண்டு பாவேந்தர் நண்பரிடம் கூறுவார் போல, 'என்ன ! தமிழ் மணம் வீசுகிறதே ! — ஓ ! ... ஔவை துரைசாமி அவர்கள் வருகிறீர்களோ ' ... ' எனப் பாராட்டினர்.

ஔவை அவர்கள் இளந்தலை முறைப் பாவலர்களையும் பாராட்டும் நற்பண்புடையவர்.

1968-ஆம் ஆண்டில் கல்லூரிப் பேராசிரியர் பணியினின்றும் ஔவையவர்கள் ஓய்வு பெற்றுர். அது முதல் முழுநேரத் தமிழ்ப் பணியில் ஈடுபட்டார்.

பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள் உதவியால் திருவருட்பாவுக்கு உரை யெழுதினர் பல ஆண்டுகளாக. அப்பணியும் முற்றுப் பெற்றது.

மதுரைப் பல்கலைக் கழகத்தில், இந்தியப் பல்கலைக் கழகங்களின் நல்கைக் குழு உரைவேந்தரை ஆராய்ச்சிப் பேராசிரியராக அமர்த்

தியது. 'தமிழ்நாட்டு ஊர்ப் பெயர் வரலாற்றுராய்ச்சி, நூல் உருவாயிற்று.

நெஞ்சிற் பட்ட கருத்தை அஞ்சாதுரைக்கும் ஆண்மையாளர் ஔவை.

சைவசித்தாந்தப் பொன்விழா மொழி மாநாட்டில் மனோன் மணியம் சுந்தரனார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேருரை ஆற்றிய போது நம் ஔவையவர்கள், "தமிழ்நாட்டிலே தமிழ் மக்கள் தமிழ் மூலம் கல்விப் பயிற்சி பெறுவதற்கு, வேலை வாய்ப்புகளுக் கேற்ற கருத்துகளைத் தமிழிலே கற்பதற்குத், தமிழ் மொழி ஏற்றதில்லை என்று சொல்கிற ஒருநிலை வந்திருக்கிறதென்றால், தமிழ மக்கள் இங்கு வாழ்கிறார்களா ? இறந்து போனார்களா? என்று தானே எண்ணத் தோன்றுகிறது !';

'தமிழிலே பேசினால் எதிர்ப்பு - தமிழிலே பாடினால் எதிர்ப்பு - தமிழிலே எழுதினால் எதிர்ப்பு - தமிழ் நாட்டிலே தமிழ்ச் சோற்றை உண்டு - தமிழ் நீரைக் குடித்துத், தமிழ்க் காற்றை நுகர்ந்து, தமிழ் நாட்டிலே வாழ்கின்றோம் என்று சொல்கின்ற மக்கள், இவ்வளவு பேதைகளாக மாறுவார்கள் என்று நான் இளமையில் எண்ணவே இல்லை. தமிழுக்கு எல்லாம் எதிர்ப்பு வாயிலாகவே இருக்கிறது என்றால் நாம் என்ன செய்வது!';

**"ஒவ்வொரு நாட்டிலேயும் அவரவர் மொழியிலேதான் எல்லாம் கற்றுக் கொடுக்கிறார்கள். இந்த நாட்டிலே மக்களாட்சி நடைபெறுகிறது. மக்களுக்குத் தெரியாத மொழியிலே ஓர் ஆட்சி நடக்குமானால் அது மக்களாட்சி யாக இல்லாமல் வெறும் மாக்க ளாட்சியாகத்தான் இருக்கும்."**

என ஆண்மை முழக்கமிட்டார் ஔவை.

மறைமலையடிகளார் தமிழ்மரபு வழிவந்த புலவருள் தலைமை சான்றவராக உரை வேந்தர் வாழ்ந்திருந்தார்.

ஔவையவர்கள் தமது இறுதி வரை இடையறாது கல்வியில் திளைத்திருந்தார். தமிழறிவு மட்டுமின்றி ஆங்கிலத்திலும் பேரறிவுடையவர் அவர். தமக்குரிய துறை மட்டுமின்றிப் பல்கலைத் துறைகளிலும் பல்வேறு அறிவியல் துறைகளிலுமுள்ள அரிய நூல்களை எழுத் தெண்ணிக் கற்றவர் இவர். ஏன்? ஆங்கிலப் புதினங்களைக் கூட விடாமல் கற்றார்! முதுமை, கல்விக்குத் தடையாக இல்லை. தம் 'வாழ்வியக்கமே கல்வி கற்பது' என்னுங் கொள்கையை நடைமுறையில் கொண்டிருந்தார்.

தமிழிலக்கண - இலக்கிய நூல்கள் பல இவர் நெஞ்சிலேயே கல் வெட்டாகியிருந்தன. எண்ணுங்கால் அப்படி அப்படியே அவை நினைவில் தோன்றி அவர் ஆய்வுக்கும் எழுத்துக்கும் உதவின.

ஔவையின் நினைவாற்றல் வியக்கத்தக்கதாகும். எந்த வேளையிலும், எந்த நிலையிலும் உரை வேந்தருக்கு எந்நூலிலிருக்கும் பாட்டும், கருத்தும், சான்றும் நினைவிலிருந்து அவர்க்குப் பயன்படும். ஆனால் தமது மூக்குக் கண்ணாடியை மறந்து விடுவார்! அவர் பொடிபோடும் பழக்க முடையவர். மூக்குத் தூள் சிறுபேழையை அடிக்கடி மறந்து விட்டுத் தேடுவார். பேரறிஞர்க்குச் சின்னஞ்சிறு செய்திகள் மறந்து விடுவது இயல்புதானே!

விடியற் காலையில் வெந்நீர் காய்ச்சுவதற்கு விறகினைச் சிறுசிறு பகுதிகளாக வெட்டித்தரும் 'கைத்தொழிலை' மிகவிருப்பத்துடன் ஆர்வமாக உரைவேந்தர் செய்வார்.

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த உரை வேந்தர் பண்பாட்டின் களஞ்சியமாகப் பெருமையின் நிலைக் களமாகத் திகழ்ந்தார்.

இவர் உள்ளத்தில் என்னென்றும் நிறைந்திருந்தது தமிழ்! தமிழ்! தமிழ்! ஒன்றேதான்.

மதுரை, திருவள்ளுவர் கழகத்தினர் 'உரைவேந்தர்' பட்ட மளித்தனர்.

தூத்துக்குடி 'சைவசித்தாந்த சபை'யினர் 'சித்தாந்த கலாநிதி' பட்டம் அளித்துப் போற்றினர்.

சிவஞான போதச் சிற்றுரை நூலை நன்கு பதிப்பித்துள்ளார். சிந்தாமணி ஆராய்ச்சி, மணிமேகலை ஆராய்ச்சி, சிலப்பதிகார நூல்கள் ஆய்வுலகில் முன்னோடிப் படைப்புகளாகும்.

மகேந்திர வரும பல்லவன் வடமொழியில்இயற்றிய நகைநாடகமான 'மத்தவிலாசத்தை' மொழிபெயர்த்துள்ளார்.

அவ்வைத் தமிழ், மதுரைக் குமரனார், தமிழ்த்தாமரை, பெருந் தகைப் பெண்டிர், தெய்வப் புலவர், நந்தா விளக்கு முதலிய ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகள் எழுதினார் ஔவை.

An Introduction to the study of Thirukkural என்னும் ஆங்கில நூலும் ஔவையால் எழுதப் பட்டுள்ளது.

இவர் சொற்பொழிவு செய்யத் தொடங்கு முன் 'திருவிளங்கு' எனத் தொடங்கும் பாடலைக் கணீரென்ற குரலால் பாடிப் பின் கடல் மடைதிறந்தாற் போல் இலக்கிய அருவியைக் கருத்துமழையைப் பொழிவார்.

1967-ஆம் ஆண்டு திசம்பர் 16, 17 ஆம் நாள்களில் சென்னையில் நிகழ்ந்த தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில் ஔவையவர்களுக்குக் 'கேடயம்' அளித்துப் பாராட்டினர்.

ஒருநாளில் நூறுமுதல் இருநூறு பக்கங்கள் வரை சோர்வின்றிச் சுணக்கமின்றி இடையறுறு ஆய்வுரை எழுதும் பேராற்றலுடையவர் உரைவேந்தர்.

உலகின் பிற பற்றுகள், பொழுதுபோக்குகள் அவரை ஈர்த்ததில்லை. பொழுதெல்லாம் தமிழுக்கு உழைத்தலே பிறவிப் பயன் எனக் கருதி உழைத்தே உடல் தளர்ந்தார்.

மதுரைப் பல்கலைக் கழகம் 'பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் ஒளவை அவர்களுக்குப் பொற்கிழியளித்துப் பாராட்டப்பட்டது.

**3-4-1981** வெள்ளிக்கிழமை காலை மதுரையில் இயற்கையெய்தினர்.

மரபுவழித் தமிழ்ப் புலவர்களுள் ஒப்பற்ற பேருரையாசிரியரும் வரலாற்றுப் பேராசிரியரும், இலக்கிய ஆய்வாளருமாகிய உரைவேந்தர் ஒளவை துரைசாமியாரின் புகழ் முத்தமிழ் மொழி உள்ளளவும் முதுலகில் நிலைபெற்று நிற்கும்.

தமிழறிஞர்களே! தமிழிளைஞர்களே, உரைவேந்தரைப் போற்றுங்கள்! அவர் போல் கல்வியிலும் தமிழ்த் தொண்டிலும் ஈடுபட்டு வாழ்வைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளுங்கள்! o

---

(அட்டை 4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின் அப்பார்ப்பனர் வெளியே வந்து, வேறு பார்ப்பனர் சிலருடன் சேர்ந்து கொண்டு, ஐயாவைச் சற்று வசைமாரிபொழிய, யானும், என் நண்பர்கள் திரு. நாச்சிமுத்து (சட்டக்கல்லூரி மாணவர்), சீனிவாசன், சாமிநாதன் (இலட்சுமி ஆலை ஊழியர்கள்) ஆகியோரும் அவர்களை அணுகி ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால் கூட்ட முடிவில் வந்து முறையாகக் கேட்டால், விடையிறுப்பதாகவும் வீண் குழப்பங்களை உண்டாக்க விரும்பாதீர்களென்றும் பணிவுடன் கேட்டுக் கொண்டோம். பணிவு பயன் பெறுமல் போகவே, நான் சற்று உரக்கவே, ''ஒரேயடியாகத் துள்ளாதீர்? நாங்கள் கோவையினின்று சொற்பொழிவைக் கேட்க வந்துள்ளோம்; பல்லடம் என்றும் பார்க்க மாட்டோம். பட்டை எடுத்து விடுவோம்! எச்சரிக்கை?'' என்று கூற, சட்டக்கல்லூரி மாணவர், சட்டையைப் பிடித்து ஒரு பார்ப்பனரைத் தள்ள, எல்லாரும் ஓடிவிட்டனர். நல்லவேளை, கூட்டத்திற்கு எவ்வகை இடையூறுமில்லை. கூட்டம் 11-30க்கு முடிவுற்றது. கூட்டத்தினர் ஐயா பேச்சைச் சுவைத்துக் கேட்டனர். மேற்கண்ட நிகழ்ச்சி நடந்தது. ஐயாவுக்குக் கூட, தெரியாதென்று நினைக்கிறேன். கூட்டமுடிவில் ஐயாவைச் சந்தித்துப் பேச முடியவில்லை.

— **மு. சுடர்வேந்தன்**, சோதிபுரம் (**கோவை**).

# தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்

— பெருஞ்சித்திரனார்.

பரிதிமாற்கலைஞரையடுத்து 1916-இல் '**பல்லாவரம் சமரச சன்மார்க்க**' நிலையத்தை நிறுவிய **சுவாமி வேதாசலனார்** அவர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத் தகுந்த ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவரும் அவருடைய அருமை மகளார், திருவாட்டி நீலாம்பிகையும் (அக்கால் அகவை 13) ஒரு நாள் மாலை, தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கையில், அடிகள், வடலூர் இராமலிங்க அடிகளார் எழுதிய 'பெற்றதாய்தனை' என்று தொடங்கும் பாடலை வாய்விட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள். அது பொழுது, 'அப்பாடலின் இரண்டாம் அடியாகிய 'உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்' என்னும் பகுதியில் வரும் '**தேகத்தை**' என்னும் வடசொல்லுக்குப் பகரமாக **யாக்கையை**' என்னும் தனித்தமிழ்ச் சொல்லைப் பெய்திருந்தால், அவ்வடி இன்னும் சிறப்பாகவும் விளக்கமாகவும் இருக்குமே' என்று தம் மகளாரிடம் கூறினர். தமிழார்வமிக்க மகளாரும் அம் மாற்றத்திற்கு மகிழ்ந்து, அவ்வாறாயின் 'இனி நாமும் வடசொற்கலந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும்' என்று கூற, இருவரும் 'இனி, அவ்வாறே தனித் தமிழையே கையாளுவோம்' என உறுதி பூண்டு, அது முதல் அனைத்து நிலைகளிலும் தனித்தமிழையே பேச்சிலும் எழுத்திலும் பயில்வாராயினர். உடனே, அடிகள் 'சுவாமி வேதாசலம்' என்ற தம் வடமொழிப் பெயரை, '**மறைமலையடிகள்**' என்று மாற்றி வழங்குவராயினர். அத்துடன், 'சமரச சன்மார்க்க நிலையம்' '**பல்லாவரம் பொதுநிலைக் கழகம்**' ஆயிற்று. அடிகள் நடத்தி வந்த 'ஞானசாகரம்' என்ற இதழின் பெயர் "**அறிவுக்கடல்**' என்று மாற்றப் பெற்றது. அடிகளின் மக்கள் பெயர்களாகிய திருஞான சம்பந்தம், மாணிக்க வாசகம், சுந்தரமூர்த்தி, திரிபுரசுந்தரி என்பன முறையே '**அறிவுத் தொடர்பு**', '**மணிமொழி**', '**அழகுரு**' '**முந்நகரழகி**' என்று மாற்றம் பெற்றன. அந்நாள் தொடங்கி மறைமலையடிகளும் அவர்களின் அருமை மகளார் நீலாம்பிகையம்மையாரும் வடசொல் உள்ளிட்ட வேற்றுச் சொற்களை அறவே களைந்து தூயதமிழிலேயே - தனிச்செந்தமிழிலேயேபேசவும் எழுதவும் தொடங்கித் தம் இறுதிக்காலம் வரையிலும் அக்கொள்கையினையே கடைப் பிடித்து வரலாயினர்.

அதன் பின்னர் அடிகள், தாம் கொண்ட தனித்தமிழ்க் கொள்கையைத் தமிழக முழுவதும் தம் அழகிய, இனிய, அறிவார்ந்த சொற்பொழிவுகளாலும், ஆராய்ச்சித்திறன் மிக்க தம் அரிய நூல்களாலும் வெளிப்படுத்திப் பரவச் செய்தார். 'மற்றைய மொழிகளின் உதவியை வேண்டாது, தனித்து இயங்க வல்ல சொல்வளமும்,

பொருட் செழுமையும் உடைய நம் செந்தமிழ் மொழியை அதற்கே யுரிய சொற்களால் வழங்காமல், அயல்மொழிச் சொற்களை இடையிடையே நுழைத்து அதன் அழகையும், வலிமையையும் சிதைத்தல் பெரிதும் குற்றமாகும் ! என்பதும், வடசொற்களை இப்போதே நாம் தடை செய்யாவிடின் தமிழ் தன்னிலை கெட்டு வேறுமொழி போலாகி விடக் கூடும்; தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமை இழந்து போவதோடு பலதமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாது இறந்து போகின்றன' என்பதும் அவர் கருத்துகளாம்.

தொடக்கத்தில் மறைமலையடிகள் கொள்கையை வடமொழியாளர் பலரும் பகடி செய்தனர் : பழித்தனர் ; 'மறைமலையடிகள்' என்னும் அவர் பெயரை 'மரஞ்செடி கொடிகள்' என்று இழித்துரைத்தனர். ஆனால் அடிகளார் தம் கொள்கையை மிக்க உறுதியோடும், ஊக்கத் தோடும் கடைப்பிடித்து ஒழுகுவாராயினர். அடிகளார் தனித் தமிழுணர்ச்சி கொள்ளுமுன், தொடக்கத்தில் வடமொழியை விலக்காமலேயே பேசியும் எழுதியும் வந்தவர்தாம். ஆனால், அந்நிலை பிழையானதும் தமிழ் மொழியைச் சிறிது சிறிதாய்க் கட்டழித்துச் சீர்குலைப்பதும் என்று தெரிந்த பின் தனித்தமிழையே தம் தலையாய கொள்கையாகக் கொண்டொழுகினர். அதற்கேற்ப அதுவரை தாம் எழுதியிருந்த நூல்களில் உள்ள வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் களைந்து, அவற்றைத் தூயதமிழ் நூல்களாக மிளிர்வித்து மறுபதிப்புச் செய்தனர். அதற்குப்பின் அவரெழுதிய நூற்கள் தனிச் செழுந்தமிழ் நூல்களாகவே ஒளிர்ந்தன. படிப்பார் உள்ளங்களைக் குளிர்வித்தன. சமயத் தொடர்பாகவும், ஆராய்ச்சி வகையிலும், வரலாற்று நிலையிலும், அறிவியல் முறையிலும் இலக்கியமாகவும் முப்பது நூல்களுக்கு மேல் அடிகள் இவ்வகையில் எழுதியுள்ளார். இவ்விடத்தில் ஒன்றை நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அது, மனோன்மணீயம் பேரா. சுந்தரனார் உள்பட, வடமொழி தவிர்ப்பாளர் சிலர், தொடக்கக் காலத்தில் வடமொழியைக் கையாண்டதற்குக், காலவேறுபாட்டால், கற்போரதும், கேட்போரதும் நிலையையெண்ணி எழுந்த ஒருவகைக் கழிவிரக்கமும், அதனால் எழுந்த தேவையுணர்வுமே அடிப்படைகள் ஆகும் என்பதாம்.

அடிகளாரின் கொள்கை அறிஞர்களிடையிலும் பொது மக்களிடையிலும் பரவத்தொடங்குவதைக் கண்ட, பர். உ. வே. சாமிநாதையர், பேரா. எசு. வையாபுரியார் முதலிய பலரும் காழ்ப்புற்று, அக் கொள்கையை எதிர்த்து எழுதவும் பேசவும் செய்யலாயினர். உ. வே. சாமிநாதையர், தனித்தமிழ்க் கொள்கையை வெறுத்துத் தம் 'நல்லுரைக் கோவை' 2-ஆம் பாகத்தில், 'தமிழ் வளர்ச்சி' என்ற கட்டுரையில், வடமொழிக் கலப்பு என்னும் உள்தலைப்பிட்டுப், 'பண்டைக் காலப் புலவர் வடமொழிப் புலவர்களோடு மனங்கலந்து பழகி, அவர்களுடைய கருத்துகளையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டி

ருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ் மக்கள் எவ்வளவோ அரிய கருத்துகளை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறு பாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒரு போதும் குறையாது' என்று எழுதுகிறார். இனி, அவர் 'சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்' என்ற நூலில் 'ஆராய்ச்சி' என்னுந் தலைப்பில், 'சங்கத் தமிழ் நன்றாயிருந்த தென்றும் பிற்காலத்தில் வட மொழிச் சம்பந்தத்தால் தமிழ் கெட்டுப் போய் விட்டதென்றும் சிலர் சொல்வர். பிற்காலத்தில் வேறு பாஷைகளின் சம்பந்தம் பெற்றுத் தமிழ் அதிக இனிமை பெற்றிருக்கிறதென்பது பெரியோர் கொள்கை' என்று குறிப்பிடுகிறார். கழகத் தமிழ் இலக்கியச் சுவடிகளை அரும்பாடு பட்டுத் தேடி, அவற்றின் அருமையுணர்ந்து மகிழ்ந்து, துன்பம் பாராது, அவற்றை வெளிக் கொணர்வதையே தம் வாழ்வாக அமைத்துக் கொண்ட தமிழ்ப்பேரறிஞர் ஆகிய உ. வே. சா. அவர்களே இவ்வாறு கூறுவாராகில் பிறர் எவ்வாறு எண்ணி யிருப்பர்; இயம்பியிருப்பர் என்று ஆயவும் வேண்டுமோ? தனித் தமிழ்க் கொள்கைக்கு ஒருவாறு எதிர்ப்பிருந்தாலும், தமிழறிஞர் பலரும் அக்கொள்கையைத் தாமும் கையாண்டு நற்றமிழை வளர்த் தனர்.

### 3. தனித்தமிழ் ஆக்கங்கள்:

தமிழ்மொழிக்கும் வரலாற்றுக்கும் ஆக்கமான அரிய ஆராய்ச்சி நூல்களையும், வரலாற்று நூல்களையும் பலர் எழுதி வெளியிட்டனர். இரா. இராகவையங்கார் (1870-1948), மு. இராகவையங்கார் ஆகிய இருபெரும் புலவர்களும் தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி நூல்களை எழுதினர். பி. டி. சீனிவாசையங்கார், எசு. கிருட்டிணசாமி அய்யங்கார், டி. சேச அய்யங்கார் ஆகியோர் எழுதிய ஆராய்ச்சி நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழர் வரலாற்றுக்கும் மேலும் வலி வூட்டின. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் 'தமிழ்ப்பொழில்' (1925) என்றோர் இதழையும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் (1920), 'செந்தமிழ்ச் செல்வி (1927) என்றோர் இதழையும் வெளிக் கொணர்ந்தனர். மதுரைச் 'செந்தமிழி'லும், கரந்தைத் 'தமிழ்ப் பொழிலி'லும், நெல்லைச் 'செந்தமிழ்ச் செல்வி'யிலும், அவ்வப்பொழுது, தமிழில், பிறமொழிக் கலப்பைக் கண்டித்தும், தனித்தமிழில் எழுது வதை வற்புறுத்தியும் பல கட்டுரைகள் வெளிவந்தன. யாழ்ப்பாணம், சுன்னாகத்திலிருந்து, ந. சி. கந்தையா அவர்களால் 'தமிழன்' என்றொரு மாத இதழ் 1926-இலிருந்து வெளியிடப் பெற்றது. இது தமிழ் மொழியின் அருமை பெருமைகளை யெல்லாம் கூறித் தனித் தமிழ்க் கொள்கையைப் போற்றியது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தையும், 'செந்தமிழ்ச் செல்வி'யையும் செவ்வனே நடத்திய மறைமலையடிகள் மருகரும், திருவாட்டி. நீலாம்பிகையம்மையாரின் கணவரும் ஆன திருவரங்கனார், அடிகளின் தூயதமிழ்த் தொண்டுக்குப் பல்லாற்றானும் துணையாக விருந்தார்.

தனித்தமிழ்க் கொள்கையை வலியுறுத்தி அறிஞர்கள் ஆங்காங் குச் சொற்பொழிவுகளும் நூற்களும் செயத வண்ணமிருந்தனர். தமிழவேள் உமாமகேசுவரனர் இக் கொள்கையில் மிக ஊக்கம் காட்டினர். தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனர் (1883-1953) தமிழிலேயே பொதுக்கூட்டங்களில் பேசியதும் 'இனிய தமிழில் தர் தாளிகையில் எழுதியதும் தமிழுக்கு ஆக்கம் செய்தது. மற்றும் அறிஞர்கள் ச. சோமசுந்தர பாரதியார் (1878-1959), 'தமிழ் மொழி யமைப்பும் மொழிநூற் கொள்கையும்' தமிழ் இலக்கிய வரலாறு (2 பகுதி) ஆகிய நூல்களின் ஆசிரியரும், தனித்தமிழ்க் காப்பாளருள் ஒருவருமாகிய கா. சுப்பிரமணியனர் (1839-1945), பொறியியலறிஞர் பா. வே. மாணிக்கனர் (1871-1971), அரசஞ்சண்முகனர் (1868-1915), பண்டிதமணி மு கதிரேசனர் (1881-1953), சாமி வேலா யுதனர் (1895), செல்வகேசவராயனர் (1864-1921), சொற்பொழி வாற்றுப்படை இயற்றிய நெல்லைப் பால்வண்ணனர், தமிழ்வரலாறு (2 பாகம்) எழுதிய தஞ்சை சீநிவாசனர் (1842-1929) திருவாட்டி. நீலாம்பிகையம்மையார், சேந்தன் செந்தமிழ், குமாரசாமியம் நூல்கள் ஆசிரியர் பாம்பன் குமர குருதாச அடிகள், தமிழின் தனிமாண்பை நாட்டிய, விருதை சிவஞான ஓகிகள், கருவூர் அறிவுதயக் கழக ஆசிரியர் ஈழத்துச் சிவானந்த அடிகளார், தமிழ்ப்புலவர் தேர்விற்குப் பாடமாக வைக்கப் பெற்றிருந்த சமற்கிருதப் பகுதியை நீக்க ஏற்பாடு செய்த கா. நமச்சிவாயனர் (1876-1937), க. ப. மகிழ்நனர், நா. மு. வேங்கடசாமியார் (1884-1940), வரகுண பாண்டியனர், தாரமங் கலம் வரதநஞ்சையனர், சென்னை மாநில 'ஆட்சிச்சொல் அகரவரிசை' யைத் தொகுத்துதவிய கணிய அறிஞர் இ. மு. சுப்பிரமணியனர் முதலிய நூற்றுக் கணக்கான புலவர்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கும், தூயதமிழ வளர்ச்சிக்கும், ஆக்கமாயிருந்து, தங்கள் அரிய நூல்க ளாலும், சொற்பொழிவுகளாலும் தமிழ்த்தாய்க்கு வலிமை சேர்த்தனர். பொறியியலறிஞர் பா. வே. மாணிக்கனர் தமிழில் உள்ள அறிவியல் ஆக்கக் கூறுகளை எடுத்துக்காட்டி அறிவியலையும் தமிழில் செய்ய முடியும் என்னும் உண்மையை நிலைநாட்டினர். அவர், அதுபற்றிக் கீழ்வருமாறு கருத்துரைப்பர். "... பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழ் அறிவியற் சொற்களை அமைத்துக் கொள்ளலாம் .... எல்லா அறிவியற் சொற்களையும் தூய தமிழாக்கலாம். இரவற்பெறுமாறு வறுமையுடைய மொழியன்று நமது உயிர் மொழியாய தமிழ்மொழி என்பது கருத்திற் பதிய வைத்தல் வேண்டும் ...... அறிவு வளர வளர மொழி வளரும். இரவலால் வளராது. ஆகலான் நமது நுட்ப அறி வினைக் கொண்டு, எல்லா அறிவியற் சொற்களையும் தூய தனித்தமிழ் மொழியிலேயே அமைத்து, நமது தாய்மொழியை வளம்பெறச் செய் வோமாக. இம் முயற்சியில் தமிழ் மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் புகுதல் வேண்டும்" (தமிழ் அறிவியற் சொற்பொழிவு-23-4-1927). இவ்வறிஞர்களின் முயற்சியும் ஆக்கமும் அளவிறந்த வாயினும், அடி

களார் ஒருவரைத் தவிர, மற்றவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் ஆங்காங்கே சிற்சில வடசொற்கள் விரவியே வந்தன. அவற்றை முற்றுங் களையுமாறு அக்கால் மொழியியலும், சொல்லியலும் ஒப்பீட்டிலக்கணத்துறையும் அத்துணை வளர்ச்சி பெறவில்லை. நீலாம்பிகையம்மையாரின் வடசொற்றமிழ் அகர வரிசையிலும் (1973) நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் வடசொற்கள் என்றே காட்டப்பெற்றன. சில வடசொற்கள் தமிழ்ச் சொற்களாக இடம்பெற்றுள்ளன. (இவற்றின் விரிவையெல்லாம் எம் தனிநூலில் காண்க.)

**4. தனித்தமிழ் இயக்கத்தின் மலர்ச்சியும் வளர்ச்சியும் :**

அ. கருவி நூல்களும், அறிஞர் முயற்சிகளும் :

மறைமலையடிகள் தனித்தமிழ் உணர்வை ஒரு முற்றுணர்வாக்கி அறிஞர்களிடையில் அதனை ஓர் இயக்கவுணர்வாகக் கால் கொள்ளும்படி செய்தனர் எனினும், அறிவியல் முறைப்படி அன்றைய நிலையில் அவ்வியக்கம் வளர்வதற்குத் தேவையான அடிப்படையான மொழியியல் நன்கு வளராமல் இருந்தது. ஒப்பீட்டிலக்கண முயற்சியும், கால்டுவெல் அளவில் நின்றது. அவர் காலத்திலும் தொல்காப்பியமும், வேறு பல கழக நூற்களும் வெளிவராமலிருந்தமையால், அவருடைய ஒப்பியல் இலக்கண ஆய்வு நூலும், தமிழ்மொழியின் உண்மையான ஆற்றலை அவ்வளவு முழுமையாக வெளிப்படுத்திவிடப் போதுமானதாக இல்லை. யாழ்ப்பாணம் ஞானப்பிரகாசரின் 'சொற்பிறப்பியல் அகராதி' இத்துறையை முழுவதும் நிறைவு செய்வதன்று. (இந்நூல் 17-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வெளிவந்தது) மொழியியல் துறையில் முதல் முயற்சியாக மாகறல் கார்த்திகேயனாரின் 'மொழிநூல்' என்னும் நூலே ஓர் அடிப்படை விளக்கத்தைத் தந்து நின்றது. அது 1913-ஆம் ஆண்டில் வெளிவந்தது. 240 பக்கங்களைக் கொண்டது. அதில் சில இன்றியமையாத கருத்துகள் சொல்லப் பெற்றிருந்தன. அவை: தமிழ் ஆரியத்திற்கு முற்பட்டதெனல்; தமிழ் மொழியில் உள்ள எல்லாச் சொற்களுக்கும் வேர் 'சுல்' எனல்; தமிழ் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் பரவியிருந்ததென்பது; குமரிக்கண்ட உண்மை தெளிவும் பொலிவும் பெறக் கூறப் பெற்றது; வடமொழியின் இலக்கணச் சிறப்பின்மை காட்டப் பெற்றது. இச்செய்திகளுடன் அந்நூல் ஓரளவு தூய தமிழிலும் எழுதப்பெற்றுள்ளது. இந்நூலுக்குப்பின் தமிழின் ஈடும் எடுப்புமற்ற அடிப்படைத் தோற்ற உண்மைகளை மொழியியல் துறையில் முறையாக எடுத்து விளக்கும் நூலாக எதுவும் வரவில்லை என்றே சொல்லுதல் வேண்டும். இந்நிலை தனித்தமிழ் இயக்க வளர்ச்சியில் ஒரு தொய்வை உண்டாக்கியிருந்தது. அறிஞர்கள் பலரும் பலவகையான இலக்கிய முயற்சிகளிலும் வேறு பல அறிவாராய்ச்சிகளிலும், கலை, பண்பாட்டு வளர்ச்சிகளிலும் கருத்துகளைச் செலுத்தினரேயொழிய, மொழியியல் துறையில் முறையாக ஈடுபட்டு, ஒலியியல், சொல்லியல், ஒப்பீட்டியல், பன்மொழி இலக்

கண அறிவு, மாந்தவரலாறு, நிலவரலாறு, முழுமையான தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி, திரவிட மொழிகளின் ஒப்பீட்டறிவு, கூர்மை வாய்ந்த இயற்கையான நுண்ணறிவு முதலியவற்றில் நிறைவுற விளக்கும்-மொழியியல் பேராசிரியர் ஒருவரை இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை காணமுடியவில்லை. அதன்பின் இக்குறையை நிறைவு செய்யும்படி, பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் தோன்றினர். இவரின் 'ஒப்பியன் மொழிநூல்' முதல் மடலம் - முதற் பாகம் 1940-இல் வெளிவந்தது. அது வரலாற்று முறைப்படி தமிழ் மொழியின் தோற்றத்தையும், ஆரியர் வரலாற்றையும், திரவிட மொழிகளின் திரிபையும் ஆய்ந்தது. அதன்பின் அவர் எழுதிய சுட்டு விளக்கம், முதல் தாய்மொழி, திரவிடத்தாய், கட்டுரை வரைவியல், வேர்ச்சொல் கட்டுரைகள், தமிழர் திருமணம், தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, தமிழர் வரலாறு, The Primary Classical Language of the world, 'வண்ணனை மொழி நூலின் வழுவியல்' முதலிய அரிய மொழியாய்வு நூல்களும், நூற்றுக்கணக்கான தமிழாராய்ச்சிக் கட்டுரைகளும் தனித்தமிழ் இயக்கத்திற்கு நல்ல உரமாகவும், ஊற்றமாகவும் இருந்தன. இவருடைய சொல்லியல் ஆய்வுக் கட்டுரைகள் ஏராளமான புதுச் சொற்களைப் புனைய அடிப்படையாக விருந்தன என்பதை எவரும் மறுத்தல் இயலாது. (தொடரும்)

---

## பாவாணர் வாழ்க்கை வரலாறு

மொழி ஞாயிறு **தேவநேயப்பாவாணர்** ஓர் ஊழி அறிஞர். அவருடன் ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகள் அகப் புறத் தொடர்பு கொண்டு, துணையிருந்து, அவரின் அரியவாற்றலை உலகுக்கு வெளிப்படுத்தி, மக்களுக் காக்கிய அவரின் தலைமாணுக்கர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**, அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் திட்டமிட்டுள்ளார். அவரின் இந்தப் பணி மிகவும் செவ்வையாக அமைய வேண்டும் என்பதால் பாவாணருடன் தொடர்பு கொண்டிருந்த அறிஞர்கள், மாணவர்கள் அன்பர்கள், நிறுவனங்கள் தங்களளவில் தாங்களறிந்த செய்திகள், புகைப்படங்கள், மடல்கள், கையெழுத்துப்படிகள், பழைய வெளியீடுகள், முதலியவற்றைப், 'பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**, ஆசிரியர் '**தென்மொழி**' சென்னை-5' என்னும் முகவரிக்கு அனுப்பித்தர வேண்டுகின்றோம். —**அமைச்சர்**.

---

## அன்பர்கள் கவனிக்க

**பொறுப்பாசிரியர்** அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

—**அமைச்சர்**.

# திருவள்ளுவர் நற்பணி மன்றம்

## கோனேரிப் பட்டி.

(வழி) இடைப்பாடி, சேலம் மாவட்டம், நடத்தும்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

# திருக்குறள் தொடர்சொற்பொழிவு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2012, விடைத்திங்கள் 2-ஆம் பக்கல் (15-5-81) முதல் 12-ஆம் பக்கல் (25-5-81) வரை, சேலம் மாவட்டம் (இடைப்பாடி வழி) கோனேரிப் பட்டி என்னும் காவிரிக் கரையோரச் சிற்றூரில் அங்குள்ள **திருவள்ளுவர் நற்பணி மன்றம், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் திருக்குறள் தொடர் சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. சொற்பொழிவு ஒவ்வொரு நாளும் மாலை 6-30 மணிமுதல் 9 மணிவரை நடைபெறும். இச் சொற்பொழிவை அண்டையயல் ஊர்களில் உள்ள அன்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தவறாது வந்து கேட்டுப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். கோனேரிப்பட்டிக்கு ஈரோட்டிலிருந்தும், சேலத்திலிருந்தும் வந்து போக நேராகப் பேருந்துகள் இருக்கின்றன. வெளியூர் அன்பர்கள் தங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன. சொற்பொழிவு நடைபெறும் பதினொரு நாட்களும் கோனேரிப் பட்டியிலேயே தங்கியிருந்து சொற்பொழிவைக் கேட்டுப் பயன்பெற விரும்பும் அன்பர்கள் உணவு பெற விரும்பின், திருவள்ளுவர் நற்பணி மன்றத்தாருடன் முன்கூட்டியே தொடர்புகொண்டு ஏற்பாடுகள் செய்து கொள்ளலாம்.

## தொடர் சொற்பொழிவு விளக்கம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 15-5-81 | வெள்ளி | — | திருக்குறள் — நூல் தோற்றத்திற்கான வரலாற்றுஅடிப்படையும், தேவையும். |
| 2. | 16-5-81 | காரி. | — | திருக்குறள் — அமைப்பியல் விளக்கம். |
| 3. | 17-5-81 | ஞாயிறு | — | குறள் கூறும் வாழ்வியல் கூறுகள். |
| 4. | 18-5-81 | திங்கள் | — | திருக்குறள் அறம். |
| 5. | 19-5-81 | செவ்வாய் | — | திருக்குறள் கூறும் இல்லற அமைப்பு. |
| 6. | 20-5-81 | அறிவன் | — | திருக்குறள் கூறும் மெய்ப்பொருளியல். |
| 7. | 21-5-81 | வியாழன் | — | திருக்குறள் அரசு. |
| 8. | 22-5-81 | வெள்ளி | — | திருக்குறள் அமைச்சு. |
| 9. | 23-5-81 | காரி | — | திருக்குறள் கூறும் குமுகாய வியல். |
| 10. | 24-5-81 | ஞாயிறு | — | திருக்குறள் காமம். |
| 11. | 25-5-81 | திங்கள் | — | திருக்குறள் சமயம் அல்லது திருவள்ளுவம் (நிறைவு விழா) |

பிற விளத்தங்கள் அறிக்கைகள் வழி வெளியிடப்பெறும்.

தொடர்புக்கு: திருவள்ளுவர் நற்பணி மன்றம், கோனேரிப்பட்டி, (வழி) இடைப்பாடி, சேலம் மாவட்டம்.

# தமிழீழக் விடுதலைக் கூட்டணியின் முன்னணித் தலைவர் கதிரைவேலனார் அவர்களின் மறைவுக்கு இரங்கலும் தமிழக மக்களுக்கு வேண்டலும்

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும், ஆற்றலும் நேர்மையும் மிக்க தமிழீழ விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும், தமிழீழ மக்களுக்கு விடிவு நோக்கிப் போராடுகின்ற நேர்மையுள்ளம் வாய்ந்த வருமான மதிப்பிற்குரிய கதிரைவேல்(பிள்ளை) அவர்கள், தமிழீழ மக்களின் தனிநாட்டுச் சிக்கல்கள் தொடாபாகத் தமிழக அரசோடும் இந்திய அரசோடும் கலந்துரையாட வந்த இடத்தில், திடீரென எதிர்பாராத வகையில் மாரடைப்பால் **31-3-81** அன்று மாலை 4-மணி யளவில் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனை யொன்றில் காலமானது குறித்து மிகவும் வருத்தமும் அதிர்ச்சியும் அடைகிறோம். அவருக்கு அகவை 56 ஆகிறது.

தமிழீழ மக்களின் போராட்ட நிகழ்ச்சிகளில் கடந்த காலத்தில், பெருமைக்குரிய கதிரைவேலனார் அவர்களுடைய ஈடுபாடு மிகவும் போற்றத்தக்கதும், எதிர்கால இளைஞர்களுக்கு வழிகாட்டத் தக்கதும் ஆகும். நேர்மையும் உண்மையும் ஆற்றலும் வாய்ந்த தலைவர்களுள் திருமிகு. கதிரைவேலனார் அவர்கள் குறிப்பிடத் தகுந்தவராவர். தமிழகத் தாய் நிலத்தில் விடுதலை மறவர் ஒருவர் அப் போராட்டப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் மறைந்தது இங்குள்ள தமிழர்களின் ஆதரவையும் இரக்கத்தையும் தேடித்தருவதாகும் தமிழக மக்கள் இவர் மறைவின் வழி, தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு நல்க வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கதிரைவேலனார் அவர்களின் உடல் **1-4-81** மாலை **6-30** மணியளவில் வானூர்தி வழியாக, யாழ்ப்பாணம் கொண்டு செல்லப் பெற்றது. காலையிலிருந்து மருத்துவமனைக்கும், வானூர்தி நிலையத்திற்கும் வந்து ஏராளமான தமிழன்பர்களும் பொதுமக்களும் அவருக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். அவர்களுள் சட்டமன்ற அவைத் தலைவர் மாண்புமிகு இராசாராம், மேலவை உறுப்பினர் பர். இரா. சனார்த்தனம், பாவலரேறு பெருஞ்சித்திரனார், தென்மொழி மறைநித்தலின்பனார், அருள் ('இலங்கா இராணி' ஆசிரியர்) அருளி (வழக்கறிஞர்) மணவைத் தம்பி, ஈழவேந்தன், மூகுந்தன், புதுவை மதுரகவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். வானூர்தி நிலையத்திற்கு வந்து மாலையிட்டும் மலர் வளையம் வைத்தும் இறுதி வணக்கம் செலுத்தியவர்களுள் அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன், முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா, தி. க. பொதுச்செயலாளர் மானமிகு கி. வீரமணி முதலியோர் மூகாமையானவர். வானூர்திக்கு அவரது சடலம் எடுத்துச் செல்லப்படுவதற்கு முன் நடந்த இரங்கல் கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், மாண்புமிகு சாதிக் பாட்சா, கி. வீரமணி, நித்தலின்பனார் ஆகியோர் உரையாற்றினர்.

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

காமமூட்டிகளின் தன்மைகளை அறிதல், அலித்தன்மையைப் பற்றி மேலும் நன்கு அறிய உதவும் என்ற நோக்குடன் அவற்றைப் பற்றி இங்குச் சிறிது விளக்குவாம். அவற்றின் தன்மைகளை அறிதல், தனக்குத்தானே மருத்துவம் செய்து கொள்வதற்கு அன்று என்பதை முதலில் மனத்தில் கொள்ள வேண்டும்.

கலவி வன்மையை மிகுதிப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட பொருள்களில், பழமையானதும், உண்மையிலேயே நாம் எந்த வேலையைச் செய்யும் என்று நினைத்திருக்கின்றோமோ அந்த வேலையைச் சிறிது செய்யக் கூடிய தன்மை உடையதும் **எரியம் (Phosphorus)** ஆகும். இது மாத்திரை வடிவிலும் (.001 கிராம்), எரிகக்காடி வடிவிலும் உட்கொள்ளப்படுகிறது. கிளிசிரோ பாசுபேட்டு, ஐப்போ பாசுபைட்டு ஆகியவையும் இக்குணம் உடையவையே. எரியம், மிகச்சிறிய அளவு தவிர மற்றபடி ஒரு கொடிய நஞ்சு. ஆனால் கிளிசிரோ பாசுபேட்டும், ஐப்போ பாசுபைட்டும் நஞ்சு என்று சொல்லுவதற்கில்லை.

காம மூட்டி என்று சொன்ன உடன் எல்லோருக்கும் 'கான்தரடிசு' நினைப்புத்தான் வரும். ஆனால் நாம் நினைக்கும் அளவிற்கு அதற்குக் கலவி விருப்பத்தை உண்டாக்கும் ஆற்றல் கிடையாது. இது கொப்புளம் உண்டாக்கும் தன்மை உடையது. அதனால் இதை மிகமிக எச்சரிக்கையுடனும், இதன் தன்மைகளை நன்கு அறிந்த மருத்துவரின் சொற்படியுமே கைக்கொள்ள வேண்டும். கான்தரடிசில் உள்ள முதன்மைப் பொருள் 'கான்தரடின்' எனப்படும். மிகச் சிறிய அளவில் அதாவது 1/600 'கிரைன்' அளவில், கலவி விருப்பம் குறைவாக உள்ளவர்களுக்கும், ஆண்குறியின் எழுச்சி இல்லாதவர்களுக்கும் பயன்படுத்தப் படலாம். பின் எச்சரிக்கையுடன் கொஞ்சமாக நோயாளியின் தாங்கும் ஆற்றலைப் பொறுத்து கூட்டலாம். சிறுநீர் பெய்யும்பொழுது வலியோ, துன்பமோ போன்ற குறிகள் தோன்றினால் உடனே மருந்தை நிறுத்தி விட வேண்டும். காய்ந்து, பொடி செய்யப்பட்ட இலையைப் பயன் படுத்தக் கூடாது. ஏன் எனில் இலைப்பொடியில் 'கான்தரடினின்' அளவு தெரியாததால் அதைப் பயன்படுத்தல் கேடு விளைவிக்கும்.

எட்டிக் கொட்டையின் முதன்மைப் பொருள் 'இசுட்ரிக்னின்' எனப்படும். ஆண்குறி வலுவற்று இருந்தாலும், நீடிக்காத எழுச்சி உடையதாக இருந்தாலும் இசுட்ரிக்னின் பயன்படுத்தப் படுகிறது. சிறிது கலவி விருப்பம் உண்டாக்கவும் பயன்படுத்தப் படுகிறது. 1/32 இலிருந்து 1/8 'கிரைன்' மாத்திரைகளாக உட்கொள்ளப் படுகிறது.

ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் உட்கொள்ள வேண்டும். இப்படியே சில காலம் உட்கொள்ள வேண்டும். அலித்தன்மையை நீக்க இஃது எவ்வகையிலும் பயன் உடையதன்று. புணர்வதற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்பு இம்மாத்திரையை விழுங்க வேண்டும். சிறிது நன்மையை எதிர்பார்க்கலாம் இசுட்ரிக்னின் கூட்டுகளில் 'நைட்ரேட்'டும் 'சல்பேட்'டும் பயன் தரக் கூடியன. முதுகுவலி, குழப்பம், காலிலும், முதுகிலும் சூடு ஆகியவை தோன்றினால் 'இசுட்ரிக்னின்' கொடுப்பதை உடனே நிறுத்தி விட வேண்டும்.

'புருசைனு'ம், இசுட்ரிக்னின் போன்று எட்டிக் கொட்டையிலிருந்து கிடைக்கும் ஒரு வகை 'அல்கலாயிடு' தான். 'இசுட்ரிக்னி'ன் போன்றே இதையும் பயன்படுத்தலாம். இரண்டையும் மாற்றி, மாற்றி கிழமைக்கு ஒரு மருந்தாகப் பயன்படுத்தினால் சில வேளைகளில் நல்ல பயன் ஏற்படுகின்றது. 'புருசைன்', 'இசுட்ரிக்னினை' விட மென்மையானது. ஆகவே அதை 1/6 'கிரைனி'லிருந்து 1/4 'கிரைன்' வரை ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் உட்கொள்ளலாம்.

'யோகிம்பின்' கண்டுபிடிக்கப்பட்ட உடன், 'ஆ! தேடியது கிடைத்து விட்டது' என எல்லோரும் குதி குதியெனக் குதித்தனர். அந்தோ! அவர்கள் எதிர்பார்த்த அளவு கிட்டிலது 'கான்தரடின்' என்ன வேலை செய்கின்றதோ அதே வேலையைத்தான் இதுவும் செய்கின்றது. கலவி உறுப்புகளின் குருதிக் குழாய்களை விரித்துக் குருதிக் குழாய்களில் அழற்சியை உண்டாக்காது மிகுதியாகக் குருதியைப் பாயச் செய்கிறது. அலித் தன்மைக்கு இது நல்ல மருந்தென்பர் மருத்துவர் சிலர். பயன் அற்றது என்பர் சிலர். இம் மருந்தால் கேடு மிகக் குறைவானதால், பயன்தர இம் மருந்தை அச்சமில்லாமல் கொடுத்துப் பார்க்கலாம். இதை மாத்திரைகளாகவும் (.005 கிராம்), தோலின்கீழ் செலுத்தும் ஊசியின் மூலமாகவும், (1% இதன் 'கைட்ரோகுளோரேட்' கரைசல் 10-இலிருந்து 15 துளி வரை) ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் கொடுக்கலாம்.

வெறியம் (மதுக்குடிப்பு) காம மூட்டும் பொருள் என்பதைப் பொதுமக்கள் கூட அறிவர். குறைந்த அளவில் குடித்தால் காம மூட்டியாக வேலை செய்கின்றது மிகுதியாகக் குடித்தால், ஆண்குறி எழுச்சி உருவண்ணம் கட்டுப்படுத்துகிறது. தன் நினைவு அற்று விடுகிறது. கூச்சம் விலகுகிறது. கூச்சத்தால் சிலர் அலித்தன்மை உடையவர்களாக இருக்கலாம். கூச்சம் விலகிய உடன் அவரால் தம் ஆண்மையைக் காட்ட ஒரு வாய்ப்பு உண்டாகிறது. வெறியம் பழக்கம் உண்டாக்கக் கூடியது. அதனால் பலகேடுகள் உண்டாகும் என்பதை அழுத்தமாக நினைவில் நிறுத்த வேண்டும்.

மயக்க மருந்துகள் பால்உணர்ச்சியைக் கொஞ்சம் கிளறும் தன்மை உடையன. ஆனால் நாட்படப் பயன்படுத்தின் அவை செய்யும் தன்மையை விடத் தீமை பல மடங்கு பெரிது, எடுத்துக்காட்டாக

# செந்தமிழ்ப் புலத்தை விளைத்தவனே!

தமிழூர் ப. அருளி.

**எடுப்பு**

உலகொளிர் தொன்மொழி உன்மொழி தானென
நலமும் நாணமும் நாநய முங்கெட
உலவுந் தமிழனை உயர்த்தினை! அலமர
விலகி மறைந்தனையோ?—நெஞ்சைக்
கலக்கிக் குலைத்தனையே!—தமிழில்
இலகி நிலைத்தவனே!— ஆய்வில்
புலத்தை விளைத்தவனே?

**படுப்பு**

தமிழ்க்குடி யின்விழி சிமிழ்த்திட வேர்வழி
தமியராய் ஆய்ந்தொண் முடிவேய்ந்தாய்
தமிழடி யும்முடி யும்நனி ஆய்ந்தே
திமிர்ந்தொளி தமிழ்பெறத் தவந்தோய்ந்தாய்!

**முடிப்பு**

ஆரிய ராங்கொடும் பூரிய நெஞ்சினர்
தேரிய நந்தமி ழைப்பிழை விஞ்சிட
கூரிய கரவினை யால்நலி வித்ததை
ஓரிய ருயெதிர்த் தாய்! மலர் வித்தனை! - பாவாண!

(உலகொளிர்...)

ஐம்பதி னுயிரம் ஆண்டுகள் ஆன்றெழும்
செம்மொழி யின்வளம் செப்பிய தோன்றலே!
தெம்பிலாத் தென்கைத் தெருமருந் தமிழரை
நம்பக நல்வழி யில்நிலை நாட்டினை!—பாவாண!

(உலகொளிர்..)

செந்தமிழ்த் தூய்மையைத் தமிழின மேன்மையை
முந்தைய நகரிகப் பண்படிப் பான்மையை
வெந்திறல் மூண்டுநந் தமிழவர் விளங்கிட
மந்திர வரிகளால் மனங்கொள விளக்கினை!—பாவாண!

(உலகொளிர்...)

---

'கொக்கையினை' எடுத்துக் கொள்வோம். தொடக்கத்தில் 'கொக்கை யி'னுல் சிறிது பயன் ஏற்படலாம். பலநாள்கள் பயன்படுத்திய பின்னே, அது விளைவிக்கும் தீமையை யாரே எடுத்துக்கூற வல்லார்? 'அபின்' முழுஅளவில் மயக்க மருந்தாகவும், சிறிய அளவில் காம மூட்டியாக வும் பயன்படுகிறது. இவ்வாறே கஞ்சாவும். கஞ்சா மிகக் காம மூட்டும் தன்மை உடையது. இவ்வாறுதான் வேலை செய்யும் என்று யாராலும் உறுதியாகக் கூற இயலாது. அதனுல் கஞ்சாவைப் பயன்படுத்துவது விரும்பத் தக்கதன்று. — (தொடரும்)

# இந்திய அரசு எங்கே போகிறது?

திருச்சி வே. ஆனைமுத்து.

**இந்தியாவின் இன்றைய நிலை :**

இந்திய மக்கள் எண்ணற்ற துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமைக்கு இந்திய அரசே முழுப்பொறுப்பு ஆகும்.

இயற்கையின் கோளாறுகளால், தமிழகத்தின் பல பகுதிகளிலும் வானம் பார்த்த நிலங்கள் காய்ந்து விட்டன. பயிரோ உணவுப் பயிர்களோ போதிய விளைச்சல் தர வாய்ப்பு இல்லை. இந்தியாவின், பிற மா நிலங்களிலும் நிலைமை இதுவே.

**ஏற்பட்டுள்ள துயர நிலைகள் :**

**1.** ஈரான் — ஈராக் போர் தொடங்கிய ஒரு மாதக் காலத்தில், டீசல்நெய், மண்ணெய், கிடைப்பது அரிதாகி விட்டது. **2.** படித்து வேலை பெருதோர் நாடு முழுவதிலும் ஒரு கோடிப்பேருக்குமேல் பெற்றோர்க்குச் சுமையாக இருக்கின்றனர். **3.** ஆலை நெசவுத் தொழிலாளர்கள் பொருள் விலைஏற்றத்துக்கு ஏற்பச் சம்பளஉயர்வு பெறுகிற அதே நேரத்தில், கைத்தறி நெசவாளர்கள் போதிய நூல் கிடைக்காததாலும் போதிய சம்பளம் கிடைக்காததாலும், வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். **4.** நெல், கோதுமை, கரும்பு இவற்றுக்கு விளைவிப்பாளர்களுக்குக் கட்டுபடியாகக் கூடியவிலை கிடைக்கவில்லை. ஆனால், அதே சமயத்தில், கடந்த பத்துமாதக் காலத்தில், அரிசி, எண்ணெய் வகைகள், பருப்புகள் இவற்றின் விலை ஏறி விட்டது. சர்க்கரை விலை ஓர் அயிர்க்குன்றி (Kilo gram) ஆறுஉருபா முதல் பதினெட்டு உருபாவரை விற்கப்படுகிறது. **5.** படிப்புத்துறையில் இன்னமும் வெள்ளையர் காலத்து ஏட்டுப்படிப்பே ஊக்கப்படுத்தப் படுகின்றது. எனவே, சொந்தமாகத் தொழில் தொடங்க முடியாத நிலையில், வெறும் பட்டம்பெற்றவர்களும், பட்டயம்பெற்றவர்களும் அரசு நிறுவனங்களையும், தனியார் நிறுவனங்களையும் நம்பி வேலையற்றுக் கிடக்கின்றனர். **6.** அரசு அலுவலகங்களிலும் அரசு நிறுவனங்களிலும் இன்னமும் குறிப்பிட்ட மேல்சாதிக்காரர்களின் மேலாளுமையே நிலவுகிறது. தனியார் தொழில் நிறுவனங்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு சாதிக்காரரிடமே உள்ளன. எனவே வெகு மக்களாக உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. இப்படி எண்ணற்ற துயர நிலைமைகள் இங்கு இருப்பது உண்மை.

**காரணம் என்ன ?**

இந்தக் கண்கூடான நிலைமைக்கு அடிப்படைக் காரணம், இவற்றைக் களைய வேண்டும் என்கிற நோக்கத்தையும் இதற்கான திட்டங்களையும் கொண்டிராத ஓர் ஆட்சி இங்கு நடப்பதே

ஆகும்; இங்கு இன்றுள்ள பாராளுமன்ற மக்கள்நாயக ஆட்சி எல்லா வகையான அதிகாரங்களேயும் கொண்டு திகழ்வதேயாகும். ஆனாலும், இங்குள்ள மக்களாட்சி அமைப்பின் முக்காலிக் கால்களாக உள்ள **சட்டமன்றம் — செயலாண்மை** (நிர்வாகம்) — **நயன்மை** (**நீதி**) என்கிற மூன்று துறைகளும் இன்னமும் பத்தாம்பசலி மனப் பான்மை மொண்டவர்கள் கையிலும், மேல் சாதிக்காரர்கள் கையிலும் சிக்கிக் கிடக்கின்றன.

**மேலாளுமை பெறுகின்றவர் யார் ?**

அசவை வந்தோருக்கு ஒப்போலை உரிமை உண்டு என்பதால், சட்டமன்றத்துறை என்பது வெகுமக்களின் படிநிகராளரைக் கொண் டதாக ஆகிவிட்டது உண்மை. என்றாலும் கட்சி அரசியல் காரணமாக வும், அந்தக் 'கட்சி அரசியலைத்'' திசைதிருப்பும் முயற்சியில் உள் நாட்டு ஆலை உரிமையாளர், தொழில் முதலைகள், நிலக்கிழார்கள், அயல்நாட்டு முதலீடுகள், அயல்நாட்டு மத அமைப்புகள் இங்கு மேலா ளுமை பெறுவதாலும், ஆளுங்கட்சியின் தலைவாரக இருக்கிற தலைமை யமைச்சரின் விருப்பப்படியே இங்கு ஆட்சி அமைந்து விடுகிறது. கடந்த முப்பத்து மூன்று ஆண்டுக்காலத் தன்னுரிமை இந்தியாவில் நேருவும், அவருடைய மகளாரும் இருபத்தெட்டு ஆண்டுக்காலம் தலைமையமைச்சர் பதவி தாங்கிவிட்டனர். நேரு - சாத்திரி காலத்தில் பாக்கிசுத்தான் - இந்தியா போரும், சீனு-இந்தியா சச்சரவும் நடந்தன. அப்போது, இந்தியர் அனைவரும் ஒருசேர அரசுக்குத் துணை நல்கினர். திருவாட்டி இந்திரா காந்தி காலத்தில் வாங்காள தேசப் பிரிவினைப் போர் வந்தது. அப்போதும் "இந்தியர் அனைவரும்'' ஒன்று திரண்டு அரசுக்கு உதவி அளித்தனர்.

**கிளர்ச்சிகள் எவ்வாறு தோன்றுகின்றன :**

இன்று அவருடைய ஆட்சிக் காலத்தில், அசாம், திரிபுரா, மணிப்பூர்க் கிளர்ச்சிகள் இந்திய மண்ணில் நடக்கின்றன. இக்கிளர்ச் சியின் அடிப்படை நோக்கம் வடகிழக்கு இந்தியாவில், நெடுங் காலமாக ஆளுமை பெற்றுவிட்ட பார்ப்பன - பனியா இனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், படிப்பாளிகள், உடன்படிக்கையாளர்கள் (காண்டிராக்டர்கள்), 'லேவாதேவி' என்னும் பெருவட்டிக்காரர்கள், வணிகர்கள் அரசியல்காரர்கள் இவர்களின் ஆளுகைக்கு முடிவு கட்டவேண்டும் என்பதேயாகும்.

**கிளர்ச்சியின் வகைகள் :**

1. இக்கிளர்ச்சியின் தாக்கம் மேற்கு வங்காளத்தைத்தாக்கிறது; வட பைதிரத்தை (உ. பி.)த் தாக்குகிறது; பீகாரைத் தாக்குகிறது. அதேபோல் மேல்சாதியினரைத் தாக்குகிறது.

2. 1967-இல் தோன்றிய நக்சல்பாரி இயக்கம் இந்தியா முழுவதிலும் பரவி வருகிறது.

3. அகன்ற இந்துப்பேரரசு அமைக்கும் நோக்கத்தைக் கொண்ட 'இராசுட்ரிய சுயம் சேவக் சங்கம்' உள்நாட்டு முதலாளிகள், மேல்சாதியினர், அயல் நாட்டு முதலாளிகள் ஆகியோரின் அரவணைப்பில், ஏறத்தாழப் பதினையாயிரம் கிளைகளுடன் மும்முரமாக இயங்கி வருகிறது.

**அரசு என்ன செய்திருக்க வேண்டும் :**

இப்படிப்பட்ட உண்மை நிலைக்கு அடிப்படைக் காரணங்களாக இருப்பவை தனியுடைமை இருப்பதும், மதஆளுமை இருப்பதும், சாதியாளுமையுடன் சாதி நடப்பும் இருப்பதுமே. ஆகும். இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, தனியுடைமையை அகற்றுவது, மதச்சார்பற்ற தன்மையில் அரசும் கல்வித்துறையும் இயங்குவது, சாதியாளுமை ஒழிய வழி வகுப்பது இவற்றையே இன்றைய இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

**ஆனல் செய்தது என்ன ?**

ஆனல், இன்றைய இந்திராகாந்தி ஆட்சி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

இன்றைய இந்திய அரசு —

1. (இந்தியத்) தேசக் காப்புறுதிச் சட்டம் என்கிற ஆள் தூக்கிச் சட்டத்தை விரைசெயற்சட்டமாக (அவசரச் சட்டமாக)ப் பிறப்பித்துவிட்டது.

2. இந்தியாவில் இப்போது உள்ள குடியரசுத்தலைவர்-தலைமையமைச்சர்-அமைச்சரவை என்பதற்குப் பகரமாக, அமெரிக்க ஒன்றிய நாடுகளிலும், பிரஞ்சு நாட்டிலும் உள்ளதுபோல் குடியாட்சித்தலைவர் முறை ஆட்சியை (Presidential form of Government) கொண்டு வர வெளிப்படையாக முயற்சி செய்யப்படுகிறது.

குரங்கு வெல்லப்பாகை நக்க விரும்பினல், குட்டியை விட்டுப் பதம் பார்ப்பது வழக்கம். இதே தன்மையில், "இந்தியாவிற்குக் குடியரசுத் தலைவர்முறை ஆட்சி வரவேண்டும் என்கிற கருத்தை வழக்குரைஞர்களே சொல்கிருர்கள்" என்கிற கருத்தை வெளியிடுவதற்காக வேண்டி, பல மாநிலங்களிலிருந்தும்,(இந்திரா) பேராயக்கட்சி வழக்குரைஞர்களைத் தில்லியில் கூட்டி வைத்து, வழக்குகள்-எதிர்வழக்குகள் நடப்பதுபோல் பாசாங்கு செய்து, அந்த மாநாட்டை இன்றைய தலைமையமைச்சரே தொடக்கிவைத்து உரையாற்றி, "குடியரசுத் தலைவர்முறை ஆட்சி வேண்டுமா ? வேண்டாமா ? என்பதுதான் இன்று இந்தியரின்முன் உள்ள முகாமைச் சிக்கல்" என்பதாக ஒரு சூழ்ச்சி நாடகம் நடத்தப்பட்டு விட்டது. இதற்கு அரசே பணச்செலவு செய்திருப்பதாகவும் நம்பகமாக அறியப்படுகிறது.

**வழக்குரைஞர்கள் மாநாடு :**

இந்த மாநாடு 25-10-80-இல் புதிய தில்லியில் நடைபெற்றது. **'அனைத்திந்திய வழக்குரைஞர்கள் மாநாடு'** என்பது அதன் பெயர்.

1. மேலை அமைச்சுப் பாராளுமன்ற முறை (இங்கிலாந்து முறை) இப்போதைய இந்தியச் சூழ்நிலையில் பொருந்துமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

2. 1950-இல் அரசியல் சட்டம் செய்யப்பட்ட பின்னர், கடந்த முப்பது ஆண்டுகளாக அச்சட்டத்தை மறுநோட்டம் (Review) இடாமல் இருக்கிறோம். இப்போது மறுநோட்டமிடல் வேண்டும்.

3. குடியரசுத்தலைவர்முறை ஆட்சி இங்குப் பொருந்தாதா என்பதை ஆராய வேண்டும் — என்கிற அறிவுரைகளை இந்த மாநாட்டில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி வழங்கியுள்ளார்.

மேற்படி, தில்லி மாநாட்டில், புதிய தில்லி, உத்தரப்பிரதேசம், அரியாணா, பஞ்சாபு, பீகார் முதலிய பக்கத்து மாநிலங்களில் உள்ள வழக்குரைஞர்களே மிகுதியானவர்கள் பங்குகொண்டனர். இவர்கள் உறுதியாக, மேல் சாதிக்காரர்களும், 'லேவா தேவி' என்னும் வட்டிக் கடைக்காரர்களும், நிலக்கிழார்களுமே ஆவர். இஃது எப்படி ?

1978-இல் பாட்னா (பீகார்) உயர்முறைமன்றத்தில் 800 வழக்குரைஞர்கள் பணியாற்றினர். இவர்களுள் ஒருவர் மட்டுமே ஆதித் திராவிடர்; 20 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர். இதுதான் உண்மை. இதைக் கொண்டு நாம் உணருவது என்ன ?

**இவற்றால் என்ன தெரிகிறது ?**

இங்கு வழக்குரைஞர்கள் என்பவர்கள் இன்னமும் மேல் சாதிக்காரர்களே; நிலக்கிழார்களே என்பதை நாம் உணருகிறோம். தென்னாட்டிலிருந்து புதிய தில்லிக்குச் சென்று பணிபுரியும் வழக்குரைஞர்கள் அய்யர், அய்யங்கார், ராவ், மேனன், ரெட்டி, நாயர் என்கிற மேல்சாதிக்காரர்களே. இவர்கள் அனைவருக்கும் நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றம், வெகுமக்களின் முன்னேற்றம் என்பதுபற்றி எந்தக் கவலையும் இருக்க முறைமை இல்லை.

இப்படி, எந்தக் கவலையும் அற்ற ஓர் கும்பலைக் கூட்டித் தம் உள்ளார்ந்த எண்ணத்துக்கு, "சட்ட அறிஞர்களே இப்படி விரும்புகிறார்கள், பார்த்தீர்களா ?" என்கிற ஒரு கருத்து அலையை மோத விட்டு, இங்குள்ள படிப்பாளிகள், இதழாளர்கள், மாணவர்கள், அரசியல்காரர்கள் ஆகியோரின் கவனத்தை அன்றாடச் சிக்கல்களிலிருந்து மிக எளிதில் திசை திருப்பிவிட்டுத், தம்மை ஒரு முற்றதிகாரியாக ஆக்கிக் கொள்ளவே இந்திரா காந்தி திட்டமிடுகிறார் என்று நாம் கொண்டால், அது தவறாகாது.

**மேலை அமைச்சு முறைகள் :**

தலைமையமைச்சர் சொல்லுகிற "மேலை அமைச்சு முறை" பற்றி இங்கு வெகுமக்களுக்குத் தெரியாது. அதேபோல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் முறை, பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் முறை என்பவை பற்றியும் வெகு பேருக்குத் தெரியாது.

மேலை அமைச்சு முறை என்பது இங்கிலாந்து முறை. அங்குக் குடியரசுத் தலைவர் பதவி கிடையாது. அதற்குப் பகரமாக அரசன் அல்லது அரசி இருக்கிறார். அங்கு மக்களவை உண்டு; பெருமக்களவை உண்டு. ஆளுங்கட்சி — எதிர்க்கட்சிகள் உண்டு.

இந்த முறையின்படி அங்குள்ள அரசனுக்குப் பகரமாக இங்குக் குடியரசுத் தலைவர் பதவி இருக்கிறது. அங்குள்ள அரசர் "இழுவ முத்திரை" போன்றவர்; இங்குள்ள குடியரசுத் தலைவரும் "இழுவ முத்திரை" (Rubber stamp) போன்றவரே.

ஆனாலும், இந்தக் குடியரசுத் தலைவர்தாம் இந்தியத் தரைப் படை, கப்பல்படை, வான்படை ஆகிய முப்படைகளுக்கும் ஒருதனித் தலைவர். மேலும் குடியரசுத்தலைவர்தாம், அவ்வப்போது விரைசெயற் சட்டங்களை (அவசரச் சட்டங்களை) அறிவிக்க முடியும்.

இப்படிப்பட்ட அதிகாரமுள்ள குடியரசுத் தலைவர் பதவி மட்டும் இங்கு ஆட்சித் தலைமைப் பதவியாக வந்து விட்டால், அமைச்சரவை என்பது அவராலேயே அமர்த்தப்படும் ஒன்றாக இருக்கும். அப்போது அமைச்சரவை என்பதும் "இழுவ முத்திரை" போடுகிற ஓர் அவை ஆகிவிடும்.

இப்படிப்பட்ட தன்மை வாய்ந்த குடியரசுத் தலைவர்முறை ஆட்சிக்கு ஏற்றபடி இன்றைய சட்டம் திருத்தப்பட்டு, அதன்பிறகு, தாமே குடியரசுத் தலைவராக ஆகிவிடவேண்டும என்பதுதான் இன்றைய தலைமையமைச்சரின் எண்ணம். இன்னும் இரண்டாண்டுகளில் இது நிறைவேற வேண்டும் என்பதும் இவருடைய திட்டம் ஆகும்.

**அமெரிக்க ஆட்சி முறை ,**

இவர் குறிப்பிடும் மேலைநாட்டு முறை (Western type) என்பது, முதலில் அமெரிக்க ஒன்றிய நாடுகளையும், அடுத்துப் பிரெஞ்சு நாட்டையும் குறிப்பதாகும்.

அமெரிக்காவில் ஐம்பது மாநிலங்கள் உள்ளன. அங்குக் கட்சி அடிப்படையில் குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பாளர் போட்டியிடுகிறார். இந்த ஆண்டில் 4-11-80-இல் நடைபெற்ற அமெரிக்க ஒன்றியத் தேர்தல் (அ) குடியரசுத் தலைவர் ஒருவரையும் (ஆ) மக்களவைக்கு (House of Representatives) 435 பேரையும்

(இ) மேலவைக்கு (Senate) ஒரு பகுதிக்கான 34 பேரையும் (ஈ) 13 ஆளுநர்களையும் (உ) மற்ற அரசு உயர் அதிகாரிகளையும் தேர்ந்தெடுப்பதற்காக என்றுதான் நடைபெற்றது.

இதில் உள்ள தனிக்கூறுகளை நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்க நாட்டில் —

1. குடியரசுத் தலைவர் என்பவர் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகிறார். அவரை அங்குள்ள பாராளுமன்றம் (காங்கிரசு) நீக்க முடியாது.

2. மேலவைக்கு (செனட்) ஒவ்வொரு மாநிலமும், சம எண்ணிக்கையில் இரண்டிரண்டு படிநிகராளரை அனுப்பும். அவர்களும் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர்களாக அமர்த்தலாம். பாராளுமன்ற உறுப்பினர்களையே அமைச்சர்களாக அமர்த்த வேண்டும் என்கிற கட்டாயமில்லை. அதே போல், தமக்கு விருப்பமானவர்களைச் செயலாளர்களாக அமர்த்தலாம்.

இந்த அமெரிக்க முறை, 1787 முதல் ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டில் இப்படி வளர்ந்திருக்கிறது.

நம் மக்களில் வெகுபேருக்கு இவைபற்றி ஒன்றும் தெரியாது.

**பிரஞ்சுக் குடியரசு முறை :**

பிரெஞ்சுக் குடியரசு முறையில் 'தேசச் சட்டமன்றம்' (National Assembly) என்கிற மக்களவை உண்டு. குடியரசு மேலவை (Council of Republic) என்கிற அவையும் உண்டு.

பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர், பிரரெஞ்சு நாட்டுக்கு இன்னார் தாம் தலைமையமைச்சர் என அமர்த்தம் செய்வார். அப்படி அமர்த்தம் பெறுபவர் 'அமைச்சரவைத் தலைவர்' (President of the Council of Ministers) என்று அழைக்கப் படுவார். அவர் அமர்த்தம் பெற்ற பிறகு, தேசச் சட்டமன்றத்தில் நம்பிக்கை ஒப்போலை பெற்றாக வேண்டும்.

இந்த அரசியலமைப்பு முறையும் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுக் காலமாக அங்குச் செயல்படுகிறது.

**ஆனால், இங்குள்ள நிலை என்ன ?**

1. விடுதலை வந்ததாகக் கூறி 33 ஆண்டுகளுக்குப் பிறகும் 67 கோடி இந்தியர்களில் 40 கோடிப்பேர் கைநாட்டுப் பேர்வழிகள். இவர்கள் 1937-இலும், 1946-இலும் வண்ணப் பெட்டிக்கே ஒப்போலை இட்டார்கள்.

*1952, 1957, 1962, 1967, 1971, 1972, 1977, 1979, 1980* ஆகிய ஒன்பது பொதுத் தேர்தல்களிலும் அடையாளப் பெட்டிக்கு

ஒப்போலை போட்டு வருகிற "இந்நாட்டு மன்னர்"களாய் இவர்கள் இருக்கிறார்கள்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில்கூடப் பாவை, (பொம்மை) அடையாளம் பயன்படுத்தப்படுவது உண்டு. ஆனால், வேட்பாளரின் பெயரை எழுதித்தான் ஒப்போலையர் (voters) அங்கே ஒப்போலை இடுகின்றனர்

எனவே, வெகுமக்களைக் கைநாட்டுப் பேர்வழிகளாக வைத்து விட்ட இந்திய ஆட்சி ஒரு வெகுமக்கட்பகை ஆட்சி என்பதைப் புரிந்துகொள்ளத் திறனில்லாத மக்கள் நிறைந்த இந்த நாட்டில்—

அமெரிக்கப் முறையில் அல்லது பிரெஞ்சு முறையில் குடியரசுத் தலைவர்முறை ஆட்சி வரவேண்டும் என்கிற கருத்து, வெகுமக்கட் பகைமைக் கருத்தேயாகும்.

**2.** இந்தியாவில் 1980-இல் 31 கோடிமக்கள் வறுமைக் குட்டையில் மூழ்கிக் கிடப்பவர்கள். இந்திய முதலாளிகள், நிலக்கிழார்கள், அமெரிக்க உளவு நிறுவனத்தார் (CIA), அராபிய எண்ணெய் வள நாடுகள், மற்றும் அயல் நாட்டு முதலாளிகள் ஆகிய இவர்கள் தரும் பணத்தில்தான் கடந்த 1962 முதல் இந்தியத் தேர்தல்கள் நடக்கின்றன என்பதைத் தெரியாத பட்டினிப் பட்டாளமும் தற்குறிப் பட்டாளமும் நிறைந்தது நம் இந்தியா.

**அடுத்து என்ன நடக்கும் ?**

இந்தக் கீழான நிலை உள்ள நாட்டில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர்முறை ஆட்சி வந்தாலும் அதன் விளைவுகள் எப்படியிருக்கும்?

1. இங்கு நேரு குடும்பத்தாரின் ஆட்சி....தொடர்ந்து நிலைக்க வழி உண்டாகும்

2. கடந்த 28 ஆண்டுக்கால நேரு குடும்ப ஆட்சி என்பது, செயலாண்மை (நிர்வாக)த் துறையில், **ஐயர், ஐயங்கார், கவுல், சாத்தி, சுக்லா, பாண்டே, தூபே, முகர்ச்சி, பானர்ச்சி, தேசாய்** என்கிற பார்ப்பன ஆட்சியாகவும்; சிங், **மேனன், நாயர், பட்டேல்** என்கிற மேல்சாதியினர் ஆட்சியாகவும்; நயன்மைத் துறையில் **பார்ப்பன, சத்திரிய,**பனியா, ஆளுமை ஆட்சியாகவும்; பொருளியல் துறையில் **பனியா, பார்ப்பன, வெள்ளையர்** ஆளுமை ஆட்சியாகவும் இருக்கவே வழி கோலியது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனகிற எந்த முயற்சியும் இங்கே அடக்கி ஒடுக்கப்பட்டு விடும். இதற்குத் தான் குடியரசுத் தலைவர்முறை ஆட்சி பயன்படும்.

**இது கற்பனையா?**

இது கற்பனைக் கூற்றா ? இல்லை :

" இப்போதுள்ள அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும்" என்கிற தலைமையமைச்சரின் எண்ணம் உண்மை

யிலேயே பெருமக்களின் நன்மையை முன்வைத்ததாக இருந்தால் 1975—1977 நெருக்கடிக் காலத்தில் இதே அரசியல் சட்டத்தைத், திருத்துவதுபற்றி திரு. சுவரண் சிங் தலைமையில் 1976-இல் அவ ரால் அமைக்கப்பட்ட குழு (Panel) தந்த அறிக்கையின் பேரில் "மதச் சார்பற்ற சமநெறிக் குடியரசு (Secular Socialist Republic)" என அறிவிக்க முன்வந்த இந்திரா காந்தி, "சமநெறி" பற்றி எந்த விளக்கத்தையும் 1976 திசம்பர் வரையிலும்கூட அரசியல் சட்டத்தில் அளிக்காமல் போனது ஏன்? மதச் சார்பற்ற தன்மை என்பதற்கு விளக்கம் தர முன்வராதது ஏன்?

**சமநெறிக் குடியரசுக்கு வாய்ப்புண்டா ?**

தனியுடைமை உரிமையை அகற்றாமலும், அனைத்து விளைவிப்புக் கருவிகளையும் வாணிகத்தையும் அரசுடைமை ஆக்காமலும் 'சமநெறிக் குடியரசு" இங்கு எப்படி வர முடியும்?

அதே போல், கல்விக்கும் மதத்துக்கும் தொடர்பு இல்லை; அரசுக் கும் மதத்துக்கும் தொடர்பு இல்லை; அனைத்து மதத்தினருக்கும் ஒரே குடியியல் (civil) சட்டம் என்கிற தன்மையில் சட்டத்தில் திருத்தம் செய்யாமல், "மதச் சார்பற்ற குடியரசு" எப்படி இங்கு வரமுடியும்? "எல்லா மதங்களும் ஒப்பே" என்பது எப்படி மதச்சார்பற்ற தன்மை ஆகும்?

அனைத்து அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டு, இழுவ முத்திரைக் குடியரசுத் தலைவரான வி. வி. கிரியைத் தம் ஆளுமையில் வைத்துக் கொண்டு, எதிர்ப்பாற்றல்களைக் கம்பி எண்ண வைத் திருந்த 1976-இல் இவற்றைச் செய்ய இந்திரா காந்தி ஏன் முன்வர வில்லை?

1977 முதல் இரண்டரை ஆண்டுக்காலம் "கண்காணா வாழ் வுக்கு"ப் போனபிறகு, இன்று இவருக்கு எந்த அதிகார ஏந்து குறை வாக இருக்கிறது?

கலவரங்களை அடக்கவும், கள்ளச் சந்தைக்காரர்களைப் பிடிக்கவும் ஏற்கனவே உள்ள 'தேசக் காப்புறுதிச் சட்டம்' (NSO) என்கிற ஆள் தூக்கிச் சட்டத்தைப் பறைசாற்றிய பிறகு, இவருக்கு இன்று என்ன அதிகாரம் குறைவாக இருக்கிறது?

**இந்திரா அடக்க விரும்பும் சாதிவெறி எது ?**

சாதிவெறியை (Communalism) அடக்கவே இந்த விரைசெயல் சட்டம் (அவசரச் சட்டம்) எனக் கூறும் இவர், எந்தச் சாதி வெறியை அடக்க எண்ணுகிறார்?

வருணாசிரமம் ஒழிய வேண்டும் என்கிற சாதி வெறியையா? சாதி வாரியாகப் பிற்படுத்தப் பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோ

ருக்கும் கல்வி — வேலை வாய்ப்புத் துறை ஒதுக்கீடு கோரும் வகுப்புரிமையையா?

அல்லது, வருணசிரமும் தீண்டாமையும் இருக்க வேண்டும் என்று கருத்துப்பரப்புகின்ற பார்ப்பன மதத்தலைவர்களின் சாதி வெறியையா? அகன்ற இந்துப் பேரரசு கோருகிற இரா. சு. ச. (RSS) காரர்களின் சாதிவெறியையா?

**அதிகாரக் குறைச்சல் எதில்?**

இன்று முதலாளிய அமைப்பையும், வருணசிரம அமைப்பையும் காப்பாற்ற வேண்டி, தேசக் காப்புறுதிச் சட்டம் செய்துகொண்ட இந்தியத் தலைமையமைச்சருக்கு இன்னும் என்ன காரணத்திற்காகக் கூடுதல் அதிகாரம் வேண்டும்?

இப்போதுள்ள 530 நாடாளுமன்ற உறுப்பினர்களில் (அசாம் நீங்கலாக) மூன்றில் இரண்டு பங்குப்பேர் (இந்திரா) பேராயக் கட்சியினர். மாநிலக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏறத்தாழ மூப்பதுபேர் இந்திரா காந்தியின் எடுபிடிகள். மாநிலங்களவையில் 240 உறுப்பினர்களில் அறுதிப் பெரும்பான்மை ஆளுங் கட்சிக்கு உண்டு.

இவ்வளவு பெரிய அளவில், நாடாளுமன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் பெரும்பான்மையைத் தம் ஆளுமையில் வைத்துள்ள இந்திரா காந்தி, "இந்தியா ஒரு சமநெறி நாடு" என அறிவிக்க இன்னமும் என்ன அதிகாரம் வேண்டும்? இங்கேதான் சூழ்ச்சியம் இருக்கிறது.

**சூழ்ச்சி என்ன?**

இன்றைய இந்தியாவை அரசியல்காரர்களும், அரசு உயர் அதிகாரிகளும், அயல்நாட்டு முதலாளிகளுக்கும், இந்தியநாட்டு முதலாளிகளுக்கும் சந்தைக் கூடமாகவும் வேட்டைக் காடாகவும் ஆக்கி விட்டனர். இவர்களின் அரவணைப்பில்தான் இங்குத் தேர்தல்கள் நடக்கின்றன; நாடாளுமன்றம் இங்கு இருக்கின்றது; இங்கு அரசுச் செயலாள்கைத் துறை இருக்கின்றது.

"இது இப்படியே நீடித்தாலும் கவலை இல்லை. ஆனால், தாமே தொடர்ந்து முற்றதிகாரியாக இருக்க வேண்டும்" என்பது ஒன்றுதான் இன்றைய தலைமையமைச்சரின் நோக்கம். இதுவே அந்தச் சூழ்ச்சியம். இதை எளிதாக அவர் நிறைவேற்றிக் கொள்ள ஒரே வழி — குடியரசுத்தலைவர் முறை ஆட்சியை இங்கே நிலைநாட்டுவதுதான்.

**இந்திரா அரசு எங்கே போகிறது?**

இந்திய அரசு — இந்திரா காந்தி ஆட்சி எங்கே போகிறது என்பதை இப்போதேனும் ஒவ்வோர் இந்தியனும் — குறிப்பாகப்

படிப்பாளிகளும், அரசியற்காரர்களும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய அரசு,

1. முற்றதிகார முறையை நோக்கி ;
2. சமநெறிக்கு எதிரான திசையை நோக்கி ;
3. வெகுமக்களுக்குப் பகைமையான போக்கை நோக்கி,

நடைபோடுகின்றது. இதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இந்த, மாந்தப் பகை— வெகுமக்கட் பகைப் போக்கை எதிர்த்துக் குலைத்திட அனைத்து முற்போக்கு ஆற்றல்களும் ஒன்று திரண்டு, உயிரைப் பணயம் வைத்துப் போராட வேண்டும். போராடாமலும், உயிரைத் தராமலும் இங்கு எப்போதும் எந்த நன்மையும் வராது. அதுவும் இந்திரா காந்தி ஆட்சியில் உறுதியாக எந்த நன்மையும் கிட்டாது. கடந்த பத்து மாதக் காலத்திய அவருடைய ஆட்சியே இதற்குப் போதிய எடுத்துக் காட்டாகும்.

— நன்றி, **"சிந்தனையாளன்"** : 8-11-80.

(கட்டுரையில் பயன்படுத்தப் பெற்றிருந்த பிறமொழிச் சொற்கள் தவிர்க்கப்பட்டுத் தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன)

தமிழ்வடிவம் : **'இரணியன்'**

---

## உரைவேந்தர் ஔவை துரைசாமியார் மறைவு !

கழகத் தமிழ் நூல்களின் உரையாசிரியர் வரிசையில் பீடுற வைத்துப் போற்றத் தக்கவரும், தம் அரிய நுண்மாண் நுழைபுல வன்மையினால், அரும்பொருள் நூல்கள் பலவற்றிற்குத் திறம் பெற உரை வகுத்தவரும், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும் புலமை மிக்கவரும், மொழிஞாயிறு பாவாணரால் மிகவும் பாராட்டி மதிக்கப் பெற்றவரும் ஆகிய **உரைவேந்தர் ஔவை துரைசாமி** அவர்கள், தம் எழுபத்தொன்பதாவது அகவையில், மதுரையில், கடந்த 3-4-1981-ஆம் பக்கல் வெள்ளிக் கிழமை மறைவெய்தினார் என்னும் செய்தியை மிகுந்த வருத்தத்துடனும் ஆற்றாமையுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். பெரும்புலவர் பெருமானாகிய அவர்களது இழப்பு, தமிழ்மொழிக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கழகத் தமிழ்ச் சான்றோர் வரிசையில் இறுதிக்காலப் புலவர் எண்ணிக்கை மிகமிக அருகி வருவது நம்மனோர்க்குப் பெருந்துயர் தருவதாகும். அவர் மறைவால் பேதுற்று நிற்கும் அப் பெரும் புலவர் குடும்பத்தினர்க்கும், சான்றோர்களுக்கும், தமிழன்பர்களுக்கும், நம் ஆற்றொணா வருத்தத்தையும், அமைவு சான்ற இரங்கலையும் உரித்தாக்கிக் கொள்கிறோம். ஔவை புகழ் தமிழ்மொழி உள்ளளவும், தமிழினம் வாழும் வரையும், தளராது நின்று தண்ணொளி வீசித் தண்டமிழ் விண் மீனெனத் திகழும்! வாழ்க ஔவை! வளர்க அவரது மாசற்ற பெரும் புகழ் !

— **பெருஞ்சித்திரனார்.**

# ஔவை துரைசாமி பற்றிப் பாவேந்தர்

அவ்வைதுரைசாமிப் பிள்ளை அருந்தமிழின்
செவ்வை உரைசாமிப் பிள்ளையன்றோ — இவ்வையம்
எக்களிக்கத் தந்தான் இருந்தமிழ் நூலுரைகள்
சிக்கலின்றித் தந்தான் தெளிந்து !

புறத்தின் உரைகள் புலமைத் திறமை
வரலாறு பேசும் மகிழ — உறவாடும்
பாட்டின் குறிப்பெல்லாம் பண்பாட்டுச் சங்கத்தேன்
கூட்டில் விளையும் கொடை.

நூலுக்கு நூலருமை காட்டுவதில் நுண்ணறிஞன்
பேலுக்குச் சொல்லவில்லை வேர்ப்பலாத் — தோலுக்குள்
உள்ள சுளைகொடுக்கும் உண்மை உழைப்பாளன்,
அள்ளக் குறையாத ஆறு.

இரவுபகல் தானறியான் இன்தமிழை வைத்து
வரவு செலவறியான் வாழ்வில் — உரமுடையான்
தன்கடன் தாய்நாட்டு மக்கட் குழைப்பதிலே
முன்கடன் என்றுரைக்கும் ஏறு.

கல்லாத் துறையில்லை கற்றதைச் சொல்லிபகை
வெல்லாத் துறையில்லை வெற்றிமிகும் — எல்லாத்
துறைக்குமவன் தொல்லறிவும் துய்ப்பறிவும் தூய் அக்
கறைக்குரிய நல்ல கரை.

முத்தமிழ் மாநாட்டில் மூண்டெழும் கோளரிமுன்
எத்தமிழன் ஈடும் இணையானான் — எத்திசையும்
பார்ப்பனர்கள் செத்தார் பழந்தமிழ்ச் சான்றுகளால்
வேர்த்தனர் வீச்சறிவினால்.

சைவத்தில் பற்றுடையான் சார்ந்த உரைநூலில்
கைவைத்து நூலைக் கறைசெய்யான் — பொய்வைத்த
பார்ப்பனச் சாமிநாத பார்ப்பின் பதிப்புகளை
நேர்ப்படுத்து வான்நடு நின்று.

முன்னாள் உரையாசிரியர் முளைக்கவிட்ட
இந்நாள் களைகள் எடுத்தெறிவான் — பன்னாள்
பழகியது போல் தமிழைப் பாருக் களிப்பான்
அழகியது அன்னோன் அறிவு.

பள்ளிமுதல் பல்கலைச் சாலைவரை பாங்கெண்ணிக்
கொள்முதல் செய்யும் கொடைமழை — வெள்ளத்தேன்
பாயாத ஊருண்டா உண்டா உரைவேந்தை
வாயார வாழ்த்தாத வாய் !

தமிழ்நிலம் (14-1-50).

# பாசறை இரங்கல்!

(புதுக்கோட்டைத் தமிழன்பர்கள் பாவாணர் பிறந்த நாளில் (பிப்ரவரி, 7) **பாசறை** என்னும் பாவிதழ் ஒன்றை உருட்டச்சு முறையில் வெளிக் கொணர்ந்தனர். அதில் பாவாணர் மறைவு குறித்துப் பாவலர் பலர் இரங்கற் பாக்கள் பாடியிருந்தனர். அவற்றில் சில பாவாணர் நினைவாக இங்கு வெளியிடப் பெறுகின்றன.)

## ஞாயிறே எழுக இன்றே!

கூற்றென்னும் கொல்வேங்கை தமிழ்நி லத்தின்
குரல்வளையாம் உனைக்கொன்றால் தமிழர் வாழ்வில்
ஏற்றம்தான் என்றுமுண்டா? ஆணி வேரை
எரித்தபின்னே பயிருண்டா? பயனும் உண்டா?
நேற்றுவரை நீயிருந்தத் துணிவி னாலே
நெடுந்துயிலில் ஆழ்ந்திருந்தோம்! நீஎம் மைக்காப்
பாற்றிடாமல் கண்ணயர்ந்தால் என்ன செய்வோம்?
பண்புமொழி ஞாயிறேநீ எழுக இன்றே!

**— ஆ.ச. தமிழ்த்தும்பி**

## பாவாணர் பிறந்த நாளில் பாசறை பிறக்கிறது!

பாவாணர் பிறந்ததிரு நாளில் வீரப்
'பாசறை'யும் பிறக்கிறது! தமிழர் தங்கள்
பவான நெஞ்சரங்கில் இஃதெ ழுந்தே
போர்முரச ஒலிஎழுப்பும்! தமிழி யக்கப்
பாவலர்கள் காவலர்கள் அணிவ குக்கப்
படைதிரட்டும்! பகைமுறிக்கும்! மொழிக்க லப்பால்
கேவியழும் தமிழன்னை விழிநீர் நீக்கும்!
கிளம்பிவரும் இதோஉங்கள் கைக ளுக்கே!

**— இரா. சு. பாப்பித்தன்.**

## பாவாணர் புகழ் போற்றி!

மறைமலை யடிக ளாரின் வழித்தோன்ற லாகி நல்ல
திறமுடன் தனித்தி யங்கும் செந்தமிழ் மேன்மைக் காக
விறலுடன் வாழ்வை ஈந்தே விரிகதி ராய்த்தி கழ்ந்த
மறவராம் தேவ நேயப் பாவாணர் புகழே போற்றி!

**— 'பாட்டறிஞர்' ப. திருவேங்கடனார்.**

## மன்னுபுகழ்ப் பாவாண! மறைந்தீரோ எமைவிட்டே?

அன்னை மொழியினிலே அண்டிவந்த மொழிக்கலத்தல்
சின்னத் துகள்என்று செந்தமிழால் தட்டிவிட்டே
உன்னை உயர்த்தாமல் உன் தாய்க்கே உயர்வளித்த
மன்னுபுகழ்ப் பாவாண! மறைந்தீரோ எமைவிட்டே?

கன்னல் தமிழ்மொழியே! கற்பனையின் பேரூற்றே!
தன்னில் நிகரில்லாத் தமிழ்விளையும் செந்நிலமே!
எண்ணில் கணக்கற்ற எரிவிளக்குப் புகைதிணறி
விண்ணில் மறைந்தீரோ வெண்டமிழின் ஒளியாக?

— தமிழுக்கு அடியன்.

## சூழ்பகை வென்ற மன்னு!

தாளாத துயர்க்கிணற்றில் எம்மைத் தள்ளித்
தமிழ்மூச்சே நீசென்ருல் நீச்சல் ஏது?
வேள்விக்குள் எமைநிறுத்திப் ஐயா, நீயோ!
விழிவிளக்கை அணைத்துக்கொண் டுறங்கு கின்ருய்!
வாழ்வுக்குத் தடம்போட்டுத் தந்த வேந்தே!
வன்சாவாம் ஆட்சியைநீ ஏன்பி டித்தாய்?
சூழ்பகையை வென்றமன்னு! நீஏன் அந்தச்
சுடுகாட்டுப் பஞ்சணையில் படுத்துக் கொண்டாய்?

— தனிக்கொடி.

## அரியமொழி ஞாயிறேநீ தோன்றி டாயா?

மூடியகண் திறக்காதா? இதழ்ம லர்ந்து
முளைவிட்டு விரிக்காதா? பகையை மாய்க்கப்
பாடியவாய் மலராதா? பொழுது மீண்டும்
பாதியிலே புலராதா? வெய்யோன் நாளும்
ஆடிவரும் கடலலைமேல் தோன்றல் போலே
அரியமொழி ஞாயிறுநீ தோன்றி டாயா?
ஓடிவரும் தமிழணர்வுக் கேள்வி? நாங்கள்
உனக்காண நடத்துகின்றோம் கண்ணீர் வேள்வி!

— கலைப்பித்தன்.

## வெற்றிக் கொடி நாட்டியவர்!

பாவாணர் நம்உள்ளப் பாவாய் ஆனுர்!
பாருக்குத் தமிழ்மணத்தைப் பரப்பு கின்ற
பூவானுர்! பொங்கிவரும் பகையி னத்தின்
பொல்லாங்கை அடக்குவதில் தமிழி னத்தின்
கோவானுர்! மொழிநூல்கள் யாத்து வெற்றிக்
கொடிநாட்டிப் புகழ்காத்த தேவ நேயர்
சாவானுர் என்பதெல்லாம் பொய்யே; நெஞ்சத்
தாமரைக்குள் தேனுகிச் சிரிக்கின் ருரே!

— வீ. ம. இளங்கோவன்.

0 : 836 : பெருமதிப்பிற்குரிய தமிழக முதல்வர் அவர்களே! வணக்கம். .... அகர முதலித் திட்டப் பணிகுறித்துத் "தென்மொழி" ஆசிரியர் திருமிகு. பெருஞ்சித்திரனார் அவர்களின் அறிக்கையும் வேண்டுகோளும் மிகமிகச் சரியானதும் செயற்படுத்தப்பட்டாக வேண்டியதுமென என்போலும் ஆயிரக் கணக்கான படித்த, அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ள - பாவாணரை அறிந்தவர்கள் - உறுதியாகக் கருதுகின்றோம். எனவே, தாங்கள் அவ் வேண்டுகோள் அறிக்கையின் கருத்தை ஏற்று முடிவு செய்து ஆணையிடவேண்டுமென்று வேண்டுகின்றேன். — **தமிழநம்பி**, வெங்காலூர்-2.

(தமிழக முதல்வர் திரு. ம. கோ. இராமச்சந்திரனுர்க்கு பதிவஞ்சலில் அன்னாரின் தனிப்பார்வைக்கென விடுக்கப்பட்ட மடலின் படி.)

0 : 837 : ஆவலுற அருந்தமிழைக் காவல் செயும் பாவலவ்! பணிவான வணக்கம். வாழ்க பல்லாண்டு. பைந்தமிழ்ப் பனிமலை,பன்மொழி விண்மணி பாவாணர் ஐயாவின் நினைவிதழ் பெற்றேன். தணிப்பரிதாந் துயர்மிக்குக் கையற்றுத் தாங்கள் தீட்டியிருத்த இரங்கல் பதிகத்தையும், ஆசிரியவுரையினையும் பன்முறை படித்தேன். 'யாம் நலிந்தோம் .... மெலிந்தோம் செந்தமிழை, மீட்கும் முயல்வில் பாவாண, நீ மீளாத் துயில் காண் போழ்தினிலே' என்ற வரிகளைப் படிக்குந் தோறும், பல்வேறு தோற்றங்களில் பாவாணர் ஐயாவின் படங்களைப் பார்க்குந் தோறும் உளந்துடித்தேன். கண்ணீர் வடித்தேன். பல்லாண்டுக் காலம் பழகி, ஒல்லாங்குழையிருந்துறுதி கூறி, மனம்போன போக்கெல்லாம் மதிகெட்டுச் சென்று திறம்பேசிக் கலாம் விளைத்துத் திரியும் இத் தரங்கெட்ட தமிழினத்தை உய்விக்க மெய்வருத்தம் நோக்காது தொண்டாற்றி வரும் தங்களுக்கு இணையற்ற துணையாய், நட்பிற்கினியராய், நல்லாசிரியராய், வழிகாட்டியாய், இலங்கிய ஓர் ஊழிப் பேரறிஞரின் பெரும்பேது பிறரைக் காட்டினும் தங்களைப் பெரிதும் தாக்கியிருக்கும். இளையற்க. முழுமையுருதுபோன அகாமுதலி உருவாக்கப்பணி குறித்துத் தாங்கள் விடுத்திருந்த வேண்டுகோள் சாலப் பொருத்தமானது. அரசும், அதிகாரிகளும் தங்களைக் கலந்தாய்ந்து அடுத்தன செய்தல் தனி நன்று. ..... தங்களது தன்னலங் கருதாத் தனிப்பெருந் தொண்டிற்கும், பாவாணர் ஐயாவின் கொள்கைளைப் பரப்புதற்கும் நமக்கு உடனே நாளிதழொன்று வேண்டும். தென்மொழி மட்டும் போதாது..... நாளிதழ் தொடங்குதல் எளிதன்று; பெருந்தொகை வேண்டும். அறிவேன். தென்மொழியன்பர் பலரும் இணைந்து கூட்டுறவு முறையில் தொடங்கி நடத்தலாமன்றோ? தென்மொழி இயக்க அமைப்பில் இது குறித்து ஆய்ந்து முடிவெடுத்தல் நலம்.

— **பெரு. தமிழ்வேந்தன்**, பவானி சாகர்

0 : 838 : மதிப்புக்கு உரிய ஐயா, பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு வணக்கம், ஐயா, சென்ற 8-3-71 தங்கள் சொற்பொழிவைப் பல்லடத்தில் கேட்டேன். நேரில் சந்தித்தேன். என்னைப் போன்ற இன்னும் நண்பர்கள் பலர் உங்களின் சொற்பொழிவைக் கேட்டுத் தமிழ்ப்பற்று இல்லாதவராக இருந்தாலும் - கண்டிப்பாகத் தங்கள் உரை வழித் திகழ்வார்கள்! உங்கள் சொற்பொழிவு தித்திக்கும் தேன்போல இருந்தது!.... என்னால் முடிந்த வரையில் என் நண்பர்களையும் மற்றும் அன்பர்களையும் தமிழ்ப்பற்று உடையவர்களாக ஆக்குவேன் என்று உறுதியளிக்கிறேன். —**மா. முத்து**, திருப்பூர்-2

0 : 839 பேரன்பு கெழுமிய, தமிழத்திரு ஐயா அவர்கட்குப் பணிவான வணக்கங்கள். திருக்குறள் பேரவையின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு .. ... சீரிய அரிய கருத்துகளை எடுத்துச் சொல்லித் தமிழின் பெருமையினையும், பழைமையினையும் திறம்பட எங்களுக்கு வழங்கினீர்கள். தங்களின் சொற்பொழிவு எங்கள் எண்ணத்தைத் தூண்டியுள்ளது. புதுவகை எழுச்சியினைப் பெற்றுள்ளோம். தங்களின் தமிழ்த்தொண்டு தொடர வேண்டி நீங்கள் பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ' விரும்பிஇயற்கையை வேண்டுகிறேன். "தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை' என்ற பாரதி தாசனின் கூற்றுக்கு உங்கள் வாழ்வு நெடிது அமைந்து எடுத்துக் காட்டாக விளங்கட்டும். — ஐயா ! தமிழில் தான் பேசுவது என்று சூள் எடுத்துக் கொண்டேன். என் கருத்தறிந்த நிலையில் வேறு மொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில்லை என உறுதியுடன் உள்ளேன். என் மனைவி, குழந்தைகள் இவர்களையும் தமிழச்சி, தமிழன் என்ற உணர்வுடையவர்களாக ஆகும்படி செயலாற்றி வரு கிறேன். ஒல்லும் வகையான் தமிழுக்குத் தொண்டு செய்வதே என் பணி என்ற உயரிய நோக்கில் நான் வாழ முடிவெடுத்துக் கொண் டேன். வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் நான் ஒரு தமிழாசிரியனாக இல்லாமல் தமிழன் என்ற உணர்வோடு என் பணி இன்று முதற் காண்டு தொடரும். தங்களைப் போன்ற தமிழ்ப் பெரியார்களின் நல்லெண்ணமும், வழி காட்டும் அறிவுரைகளும்தாம் என் பணிக்குத் தொடக்க விழாவாகும். தாங்கள் பொழியும் மேகமாவீர்கள். பேரவை நிகழ்ச்சியில் தங்களின் உரையினைக் கேட்டுப் பெருமிதம் கொண் டேன். ஐயா, அரிய கருத்துகளை யெல்லாம் தென்மொழியில் எழுதுங்கள். பிறமொழிகளின் தாக்கத்தால் மயங்கித் துன்புறும் மாந்த உயிர்களைத் தெளியச் செய்யுங்கள். உங்கள் பணி அதற் கெனவே உள்ளதென்பதை அறிவும் போதும். உங்கள் வாழ்வைத் தமிழுக்கும் தமிழனின் நலனுக்காகவும் படையலாக்கி விட்டீர்கள் என்பதை எண்ணும் போதும் பெருமிதம் கொள்ளும் முதல் தமிழனாக இருக்கிறேன். தமிழ் வாழ்க ! தமிழினம் வளர்க !

— **கோ. தமிழரசன்**, இல. இ. பெரியகரம், செஞ்சி.

0 : 840 பேரன்புக்கினிய (புரப்பாசிரியர் அண்ணார் நித்தலின் பனார் அவர்களுக்கு — (8-3-81 அன்று) இரவு பல்லடத்தில் நடந்த பாவலரேறு ஐயா கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். பல்லடம் கூட்டத்தில் ஐயா பேசிக் கொண்டிருக்கும்போது, ஆரியப் பார்ப் பனர்களை முறையாகச்சாடி, கடவுள்கள் பெயரால் அவர்கள் நம்மை ஆளும், ஆட்டுவிக்கும் நிலையைக் கண்டித்தார் எல்லோரும் பேச்சினை வியந்து, கேட்டுக்கொண்டிருக்கும்போது, பார்ப்பனன் ஒருவன் மது அருந்திவிட்டுத் தள்ளாடிய நிலையில் கூட்டத்தின் ஒருபுறமிருந்து ஐயா அவர்களை வணங்கியபடி 'கடவுளைத் தாக்கிப் பேசக் கூடாது' என்று கூற, ஐயா அதற்கு "மதிமயங்கிய நிலை தெளிந்தால் அவரது வேண்டுதலுக்கு விடையிறுப்பதாக"க் கூறிப், பேச்சைத் தொடர்ந் தார். பல்லடம் முத்துக்குமரன் மேற்படி பார்ப்பனரை வெளி யேற்றினர். ஐயா தொடர்ந்து பேசினர். (தொடர்ச்சி பக்கம் 16)